ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமாநுஜாய நம:



# நித்யாநுஸந்தாநம்



**First Edition: 2008**

Copyright © 2008
All Rights Reserved

# நித்யாநுஸந்தாநம்

பொது தனியன்கள் ..... 3
திருப்பல்லாண்டு ..... 3
  திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி தனியன்கள் ..... 4
  திருப்பல்லாண்டு ..... 4
திருப்பள்ளியெழுச்சி ..... 6
  திருப்பள்ளியெழுச்சி தனியன்கள் ..... 6
  திருப்பள்ளியெழுச்சி ..... 6
திருப்பாவை ..... 9
  திருப்பாவை தனியன்கள் ..... 9
  திருப்பாவை ..... 9
வெண்ணெய் அளைந்த ..... 16
திருமஞ்சன காலத்தில் சேர்த்து அனுஸந்திக்கும் பாசுரங்கள் ..... 17
ஆநிரை ..... 18
இந்திரனோடு ..... 20
அமலனாதிபிரான் ..... 21
  அமலனாதிபிரான் தனியன்கள் ..... 21
  அமலனாதிபிரான் ..... 21
கண்ணிநுண் சிறுத்தாம்பு ..... 23
  கண்ணிநுண் சிறுத்தாம்புத் தனியன்கள் ..... 23
  கண்ணிநுண் சிறுத்தாம்பு ..... 23
கோவில் திருவாய்மொழி ..... 25
  திருவாய்மொழி தனியன்கள் ..... 25
  உயர்வற உயர்நலம் ..... 26
  வீடுமின் ..... 27
  கிளரொளி ..... 28
  ஒழிவில் காலம் ..... 30
  ஒன்றும் தேவும் ..... 31
  ஆராவமுதே ..... 33
  உலகமுண்ட ..... 34
  கங்குலும் பகலும் ..... 36
  நெடுமாற்கடிமை ..... 38
  மாலை நண்ணி ..... 40
  சூழ் விசும்பு ..... 41
  முனியே ..... 43
இராமானுச நூற்றந்தாதி ..... 44
  இராமானுச நூற்றந்தாதித் தனியன்கள் ..... 44
  இராமானுச நூற்றந்தாதி ..... 45
உபதேச ரத்தினமாலை ..... 59
  உபதேச ரத்தினமாலை தனியன் ..... 59
  உபதேச ரத்தினமாலை ..... 59
சாற்றுமுறை ..... 69
ஆழ்வார்கள் வாழி திருநாமம் ..... 70
ஓராண்வழி ஆசார்யர்கள் வாழி திருநாமம் ..... 74
இயல் சாத்து ..... 81

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பொது தனியன்கள்

### மணவாள மாமுனிகள் தனியன்
### (அழகிய மணவாளன் அருளிச் செய்தது)

ஸ்ரீஷைலேஷ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்ய ஜாமாதரம் முநிம் ||

### குரு பரம்பரை தனியன்
### (கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

லக்ஷ்மீ நாத$_2$ ஸமாரம்ப$_4$ாம் நாத$_2$யாமுந மத்$_4$யமாம் |
அஸ்மத$_3$ாசார்ய பர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ரு பரம்பராம் ||

### எம்பெருமானார் தனியன்
### (கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

யோ நித்யம் அச்யுத பத$_3$ாம்பு$_3$ஜ யுக்$_3$மருக்ம
வ்யாமோஹதஸ் ததி$_3$தராணி த்ருணாய மேநே |
அஸ்மத்$_3$ கு$_3$ரோர் ப$_4$கவதோssஸ்ய த$_3$யைகசிந்தே$_4$ா:
ராமானுஜஸ்ய சரணௌ ஷரணம் ப்ரபத்$_3$யே ||

### நம்மாழ்வார் தனியன்
### (ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர் வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரி யுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ||

### ஆழ்வார்கள் உடையவர் தனியன்
### (ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்தது)

பூ$_4$தம் ஸரஸ்ய மஹத$_3$ாஹ்வய ப$_4$ட்ட நாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஷேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ரமிஷ்ராந்
ஸ்ரீமத் பராங்குஷ முநிம் ப்ரணதோssஸ்மி நித்யம் ||

---

### பெரியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பல்லாண்டு

## திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேத$_3$ாநஷேஷ$_2$ான்
நரபதிபரிக்லுப்தம் ஷூல்கமாத$_3$ாதுகாம: |
ஸ்வஷூரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

### பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால் *
சொன்னார் கழற் கமலம் சூடினோம் * - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் * கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான் வந்தான் என்று *
ஈண்டிய சங்கம் எடுத்தூத * - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடைய பற்று

### பெரியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பல்லாண்டு

1 * பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம்[1]
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! * உன்
சேவடி[2] செவ்வி திருக்காப்பு ** 1

2 * அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வலமார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார்சோதி வலத்துறையும் * சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

3 வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் * வந்து மண்ணும் மணமும் கொண்மின் *
கூழாட்பட்டு நின்றீர்களை * எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் **
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் * இராக்கதர் வாழ் * இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 3

---
[1] நூறாயிரமும்
[2] செவ்வடி

4 ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து *
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி * வந்தொல்லைக் கூடுமினோ **
நாடும் நகரமும் நன்கறிய * நமோ நாராயணாய என்று *
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்! * வந்து பல்லாண்டு கூறுமினே 4

5 அண்டக் குலத்துக்கு அதிபதியாகி * அசுரர் இராக்கதரை *
இண்டைக்[3] குலத்தை எடுத்துக் களைந்த * இருடீகேசன் தனக்கு **
தொண்டக் குலத்தில் உள்ளீர்! * வந்தடி தொழுது ஆயிர நாமம் சொல்லி *
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து * பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
என்மினே 5

6 எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் * ஏழ்படிகால் தொடங்கி *
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ** திருவோணத் திருவிழவில்
அந்தியம்போதில் அரி உருவாகி * அரியை அழித்தவனை *
பந்தனை தீரப் பல்லாண்டு * பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே 6

7 தீயில் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி * திகழ் திருச் சக்கரத்தின் *
கோயில் பொறியாலே ஒற்றுண்டு நின்று * குடிகுடி ஆட்செய்கின்றோம் **
மாயப் பொருபடை வாணனை * ஆயிரம் தோளும் பொழி குருதி
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 7

8 நெய்யிடை[4] நல்லதோர் சோறும் * நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும் **
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து * என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல *
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் * பல்லாண்டு கூறுவனே 8

9 உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை * உடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன * சூடும் இத்தொண்டர்களோம் **
விடுத்த திசைக் கருமம் திருத்தித் * திருவோணத் திருவிழவில் *
படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் * பல்லாண்டு
கூறுதுமே 9

10 எந்நாள் எம்பெருமான் * உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் * வீடு பெற்று உய்ந்தது காண் **
செந்நாள் தோற்றித் * திருமதுரையுள் சிலை குனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே! * உன்னைப் பல்லாண்டு கூறுதுமே 10

11 * அல்வழக்கு ஒன்றும் இல்லா * அணிகோட்டியர் கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! * நானும் உனக்குப் பழவடியேன் **
நல்வகையால் நமோ நாராயணா என்று * நாமம் பல பரவி *

---

[3] இண்டைக்

[4] நெய்யெடை/நெய்யடை

பல்வகையாலும் பவித்திரனே! * உன்னைப் பல்லாண்டு கூறுவனே 11

12 * பல்லாண்டென்று பவித்திரனைப் * பரமேட்டியை * சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை * வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் **
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் * நமோ நாராயணாய என்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் * சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே 12

---

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பள்ளியெழுச்சி

### திருப்பள்ளியெழுச்சி தனியன்கள்

### திருமாலையாண்டான் அருளிச் செய்தது

தமேவ[5] மத்வா பரவாஸுதே$_3$வம்
ரங்கே$_3$ஷயம் ராஜவத$_3$ர்ஹணீயம் |
ப்ராபே$_3$ாதி$_4$கீம் யோக்ருத ஸூக்திமாலாம்
ப$_4$க்த$_2$ாங்க்$_4$ரி ரேணும் ப$_3$க$_3$வந்தமீடே ||

### திருவரங்கப் பெருமாள் அரையர் அருளிச் செய்தது

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னிய சீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் * - வண்டு
திணர்த்த வயல் தென்னரங்கத்தம்மானைப் * பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்த ஊர்

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பள்ளியெழுச்சி
### (ஸ்ரீரங்கநாதனைத் துயில் உணர்த்தல்)

917 * கதிரவன் குண திசைச் சிகரம் வந்தணைந்தான் *
கன இருள் அகன்றது காலையம் பொழுதாய் *
மது விரிந்தொழுகின[6] மாமலர் எல்லாம் *
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி **
எதிர் திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த *
இருங் களிற்றீட்டமும் பிடியொடு முரசும் *
அதிர்தலில் அலை கடல் போன்றுளதெங்கும் *

---

[5] த்வாமேவ
[6] விருந்தொழுகின

அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 1

918 கொழுங் கொடி முல்லையின் கொழுமலர் அணவிக் *
கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ *
எழுந்தன மலர் அணைப் பள்ளி கொள்[7] அன்னம் *
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி **
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ் வாய் *
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கு அனுங்கி *
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 2

919 சுடரொளி பரந்தன சூழ் திசை எல்லாம் *
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி *
படரொளி பசுத்தனன் பனி மதி இவனோ *
பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின் **
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற *
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ *
அடலொளி திகழ் தரு திகிரியந் தடக்கை *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 3

920 மேட்டிள மேதிகள் தளை விடும் ஆயர்கள் *
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும் *
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள் *
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை **
வாட்டிய வரி சிலை வானவர் ஏறே! *
மாமுனி வேள்வியைக் காத்து * அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே! *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 4

921 புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய் *
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குண திசை கனைகடல் அரவம் *
களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த **
அலங்கலன் தொடையல் கொண்டு அடியிணை பணிவான் *
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா! *
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில் *
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே 5

922 இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ? *
இறையவர் பதினொரு விடையரும் இவரோ? *
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ? *

---
[7] கொண்டு

மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி **
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும் *
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம் *
அருவரை அனைய நின் கோயில் முன் இவரோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 6

923 அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ? *
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ? *
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ? *
எம்பெருமான் உன கோயிலின் வாசல் **
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க *
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ? *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 7

924 வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க *
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா *
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு *
ஏற்பனவாயின கொண்டு நன் முனிவர் **
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ? *
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி *
அம்பர தலத்தில் நின்றகல்கின்றது இருள் போய் *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 8

925 * ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி *
யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் **
மாதவர் வானவர் சாரணர் இயக்கர் *
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள *
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே 9

926 * கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ? *
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ? *
துடி இடையார் சுரி குழல் பிழிந்துதறித் *
துகில் உடுத்தேறினர் சூழ் புனல் அரங்கா! **
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து *
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை * அளியன் என்றருளி உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்! * பள்ளி எழுந்தருளாயே! 10

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## ஆண்டாள் அருளிச் செய்த
## திருப்பாவை

### திருப்பாவை தனியன்கள்

### பராசர பட்டர் அருளிச் செய்தது

நீளா துங்க3 ஸ்தந கி3ரி தடீ2 ஸுப்தம் உத்3பே3ாத்4ய க்ருஷ்2ணம்
பாரார்த்2யம் ஸ்வம் ஷ்ருதி ஷத ஷிரஸ் ஸித்3த4ம் அத்4யாபயந்தீ |
ஸ்வோச்சிஷ்ட2ாயாம் ஸ்ரஜி நிக3ளிதம் யா ப3லாத் க்ருத்ய பு4ங்க்தே
கே3ாத3ா தஸ்யை நம இத3ம் இத3ம் பூ4ய ஏவாஸ்து பூ4ய: ||

### உய்யக்கொண்டார் அருளிச் செய்தவை

அன்னவயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் * - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! * தொல்பாவை
பாடி அருள வல்ல பல்வளையாய்! * - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாம் கடவா வண்ணமே நல்கு

## ஆண்டாள் அருளிச் செய்த
## திருப்பாவை

474 * மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்னாளால் *
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்! *
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! *
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன் **
ஏரார்ந்த கண்ணி, யசோதை இளஞ்சிங்கம் *
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான் *
நாராயணனே நமக்கே பறை தருவான் *
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் 1

475 வையத்து வாழ்வீர்காள்!, நாமும் நம் பாவைக்குச் *
செய்யும் கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி *
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி **
மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம் *

செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம் *
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி *
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய் 2

476 * ஓங்கி உலகளந்த, உத்தமன் பேர் பாடி *
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால் *
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து *
ஓங்கு பெறுஞ் செந்நெலூடு கயல் உகளப் **
பூங்குவளைப் போதில், பொறி வண்டு கண் படுப்பத் *
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் * குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் *
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் 3

477 ஆழி மழைக் கண்ணா!, ஒன்று நீ கை கரவேல் *
ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி *
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப் *
பாழியன் தோளுடைப் பற்பநாபன் கையில் **
ஆழி போல் மின்னி, வலம்புரி போல் நின்றதிர்ந்து *
தாழாதே சார்ங்கம் உதைத்த சர மழை போல் *
வாழ உலகினில் பெய்திடாய் * நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் 4

478 மாயனை, மன்னு வடமதுரை மைந்தனைத் *
தூய பெரு நீர் யமுனைத் துறைவனை *
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத் *
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத் **
தூயோமாய் வந்து நாம், தூமலர் தூவித் தொழுது *
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் *
போய பிழையும் புகுதருவான் நின்றனவும் *
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் 5

479 புள்ளும் சிலம்பின காண், புள்ளரையன் கோயில்[8] *
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? *
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு *
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி **
வெள்ளத்தரவில், துயில் அமர்ந்த வித்தினை *
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் *
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் *
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 6

480 கீசு கீசென்று எங்கும், ஆனைச் சாத்தன் * கலந்து

[8] கோயிலில்

பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே! *
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து *
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் ** மத்தினால்
ஓசை படுத்தத், தயிர் அரவம் கேட்டிலையோ? *
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி *
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ? *
தேசமுடையாய்! திறவேலோர் எம்பாவாய் 7

481 கீழ் வானம் வெள்ளென்று, எருமை சிறு வீடு *
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும் *
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து * உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் ** கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு *
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய *
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் *
ஆவா என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய் 8

482 தூமணி மாடத்துச், சுற்றும் விளக்கெரியத் *
தூபம்[9] கமழத் துயிலணை மேல் கண் வளரும் *
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய் *
மாமீர்! அவளை எழுப்பீரோ? ** உன்[10] மகள் தான்
ஊமையோ?, அன்றிச் செவிடோ? அனந்தலோ? *
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ? *
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று *
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய் 9

483 நோற்றுச் சுவர்க்கம், புகுகின்ற அம்மனாய் *
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார் *
நாற்றத் துழாய் முடி நாராயணன் * நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் ** பண்டொரு நாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த, கும்பகரணனும் *
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ *
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே! *
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய் 10

484 கற்றுக் கறவைக், கணங்கள் பல கறந்து *
செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும் *
குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே! *
புற்றரவல்குல் புனமயிலே போதராய்! **
சுற்றத்துத் தோழிமார், எல்லாரும் வந்து * நின்

[9] தூமம்
[10] உம்

முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட *
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! * நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய் 11

485 கனைத்திளங் கற்றெருமை, கன்றுக்கு இரங்கி *
நினைத்து முலை வழியே நின்று பால் சோர *
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்! *
பனித்தலை வீழ நின் வாசற் கடை பற்றிச் **
சினத்தினால் தென்னிலங்கைக், கோமானைச் செற்ற *
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய் *
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்! *
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய் 12

486 புள்ளின் வாய் கீண்டானைப், பொல்லா அரக்கனை *
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப் *
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார் *
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று **
புள்ளும் சிலம்பின காண், போதரிக் கண்ணினாய்! *
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே *
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால் *
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய் 13

487 உங்கள் புழைக்கடைத்[11], தோட்டத்து வாவியுள் *
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண் *
செங்கல் பொடிக்கூரை வெண்பல் தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்[12] **
எங்களை முன்னம், எழுப்புவான் வாய் பேசும் *
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்! *
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் *
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் 14

488 எல்லே! இளங்கிளியே!, இன்னம் உறங்குதியோ! *
சில்லென்று அழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன் *
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும் *
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக **
ஒல்லை நீ போதாய், உனக்கென்ன வேறுடையை[13] *
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள் *
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை * மாயனைப் பாடேலோர் எம்பாவாய் 15

---

[11] புறங்கடை
[12] போகின்றார்
[13] வேறுடைமை

489 * நாயகனாய் நின்ற, நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! * கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே! * மணிக் கதவம் தாள் திறவாய் *
ஆயர் சிறுமியரோமுக்கு ** அறை பறை
மாயன் மணிவண்ணன், நென்னலே வாய் நேர்ந்தான் *
தூயோமாய் வந்தோம் துயிலெழப்[14] பாடுவான் *
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! * நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய் 16

490 அம்பரமே தண்ணீரே, சோறே அறஞ்செய்யும் *
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய் *
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே! *
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய் **
அம்பரம் ஊடறுத்து, ஓங்கி உலகளந்த *
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய் *
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா! *
உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய் 17

491 * உந்து மதகளிற்றன், ஓடாத தோள் வலியன் *
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்! *
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய் *
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் ** மாதவிப்
பந்தல் மேல், பல்கால் குயிலினங்கள் கூவின காண் *
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாடச் *
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப *
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய் 18

492 குத்து விளக்கெரியக், கோட்டுக் கால் கட்டில் மேல் *
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறி *
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கை மேல் *
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய் **
மைத்தடங் கண்ணினாய்!, நீ உன் மணாளனை *
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண் *
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால் *
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய் 19

493 முப்பத்து மூவர், அமரர்க்கு முன் சென்று *
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய் *
செப்பம் உடையாய்! திறல் உடையாய்! * செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய் **

[14] துயிலெழல்

செப்பென்ன மென்முலைச், செவ்வாய்ச் சிறு மருங்குல் *
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய் *
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை *
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய் 20

494 ஏற்ற கலங்கள், எதிர் பொங்கி மீதளிப்ப *
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள் *
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய் *
ஊற்றம் உடையாய்! பெரியாய்! ** உலகினில்
தோற்றமாய் நின்ற, சுடரே! துயிலெழாய் *
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற் கண் *
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே *
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய் 21

495 அங்கண் மா ஞாலத்து அரசர் * அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே *
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம் *
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே[15] **
செங்கண் சிறுச் சிறிதே, எம் மேல் விழியாவோ *
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல் *
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல் *
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய் 22

496 * மாரி மலை முழைஞ்சில், மன்னிக் கிடந்துறங்கும் *
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து *
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி *
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் **
போதருமா போலே[16], நீ பூவைப் பூ வண்ணா * உன்
கோயில் நின்று[17] இங்ஙனே போந்தருளி * கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து * யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய் 23

497 * அன்று இவ்வுககம் அளந்தாய்!, அடி போற்றி *
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி *
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி *
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி **
குன்று குடையாய் எடுத்தாய்!, குணம் போற்றி *
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி *
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் *

[15] பூப் போல
[16] போருமா போல
[17] நின்றும்

இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய் 24

498 ஒருத்தி மகனாய்ப் பிறந்து * ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் *
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த *
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் **
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! * உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில் *
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி *
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய் 25

499 மாலே! மணிவண்ணா!, மார்கழி நீராடுவான் *
மேலையார் செய்வனகள்[18] வேண்டுவன கேட்டியேல் *
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன *
பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே **
போல்வன சங்கங்கள், போய்ப்பாடுடையனவே *
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே *
கோல விளக்கே கொடியே விதானமே *
ஆலின் இலையாய்! அருளேலோர் எம்பாவாய் 26

500 * கூடாரை வெல்லும் சீர்க், கோவிந்தா! * உந்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாகச் *
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே **
பாடகமே என்றனைய, பல்கலனும் யாம் அணிவோம் *
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு *
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் *
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 27

501 * கறவைகள் பின் சென்று, கானம் சேர்ந்துண்போம் *
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து * உந்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம் *
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா! ** உன்தன்னோடு
உறவேல் நமக்கு, இங்கு ஒழிக்க ஒழியாது *
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னைச்
சிறு பேர் அழைத்தனவும் சீறி அருளாதே *
இறைவா! நீ தாராய் பறை ஏலோர் எம்பாவாய் 28

502 * சிற்றஞ் சிறு காலே[19], வந்துன்னைச் சேவித்து * உன்

[18] செய்வினைகள்
[19] சிறு காலை

பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து[20] * நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது **
இற்றைப் பறை கொள்வான், அன்று காண் கோவிந்தா! *
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் *
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் 29

503 * வங்கக் கடல் கடைந்த, மாதவனைக் கேசவனைத் *
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி *
அங்கு அப்பறை கொண்டவாற்றை * அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன **
சங்கத் தமிழ் மாலை, முப்பதும் தப்பாமே *
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் *
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் *
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய் 30

---

### பெரியாழ்வார் அருளிச் செய்த
## பெரியாழ்வார் திருமொழி 2-4 - வெண்ணெய் அளைந்த[21]
### (கண்ணனை நீராட அழைத்தல்)

152 * வெண்ணெய் அளைந்த குணுங்கும் * விளையாடு புழுதியும் கொண்டு *
திண்ணென இவ்விரா உன்னைத் * தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன் **
எண்ணெய்ப் புளிப் பழம் கொண்டு * இங்கெத்தனை போதும் இருந்தேன் *
நண்ணல் அரிய பிரானே! * நாரணா! நீராட வாராய்! 1

153 கன்றுகள் ஓடச் செவியில் * கட்டெறும்பு பிடித்திட்டால் *
தென்றிக் கெடுமாகில் * வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன் **
நின்ற மராமரம் சாய்த்தாய் * நீ பிறந்த திருவோணம் *
இன்று நீ நீராட வேண்டும் * எம்பிரான்! ஓடாதே வாராய்! 2

154 பேய்ச்சி முலை உண்ணக் கண்டு * பின்னையும் நில்லாது என் நெஞ்சம் *
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி * அழைக்கவும் நான் முலை தந்தேன் **
காய்ச்சின நீரொடு நெல்லி * கடாரத்தில் பூரித்து வைத்தேன் *
வாய்த்த புகழ் மணிவண்ணா! * மஞ்சனமாட நீ வாராய்! 3

155 கஞ்சன் புணர்ப்பினில் வந்த * கடிய சகடம் உதைத்து *
வஞ்சகப் பேய் மகள் துஞ்ச * வாய் முலை வைத்த பிரானே! **

---

[20] பிறந்த

[21] திருமஞ்சன காலத்தில் சேவிக்கப்படுவது

மஞ்சளும் செங்கழுநீரின் * வாசிகையும் நாறு சாந்தும் *
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் * அழகனே! நீராட வாராய்! 4

156 அப்பம் கலந்த சிற்றுண்டி[22] * அக்காரம் பாலில் கலந்து *
சொப்பட நான் சுட்டு வைத்தேன் * தின்னல் உறுதியேல் நம்பீ! **
செப்பிள மென்முலையார்கள் * சிறு புறம் பேசிச் சிரிப்பர் *
சொப்பட நீராட வேண்டும் * சோத்தம் பிரான்! இங்கே வாராய்! 5

157 எண்ணெய்க் குடத்தை உருட்டி * இளம் பிள்ளை கிள்ளி எழுப்பி *
கண்ணைப் புரட்டி விழித்துக் * கழகண்டு[23] செய்யும் பிரானே! **
உண்ணக் கனிகள் தருவன் * ஒலிகடல் ஓத நீர் போலே *
வண்ணம் அழகிய நம்பீ! * மஞ்சனமாட நீ வாராய்! 6

158 கறந்த நற்பாலும் தயிரும் * கடைந்துறி மேல் வைத்த வெண்ணெய் *
பிறந்ததுவே முதலாகப் * பெற்றறியேன் எம்பிரானே! **
சிறந்த நற்றாய் அலர் தூற்றும் * என்பதனால் பிறர் முன்னே *
மறந்தும் உரையாட மாட்டேன் * மஞ்சனமாட நீ வாராய் 7

159 கன்றினை வாலோலை கட்டிக் * கனிகள் உதிர எறிந்து *
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப் * பிடித்துக் கொண்டாட்டினாய் -
போலும் **
நின் திறத்தேன் அல்லேன் நம்பீ! * நீ பிறந்த திரு நல்நாள் *
நன்று நீ நீராட வேண்டும் * நாரணா! ஓடாதே வாராய்! 8

160 பூனித் தொழுவினில் புக்குப் * புழுதி அளைந்த பொன் மேனி *
காணப் பெரிதும் உகப்பன் * ஆகிலும் கண்டார் பழிப்பர் **
நாண் எத்தனையும் இலாதாய்! * நப்பின்னை காணில் சிரிக்கும் *
மாணிக்கமே! என் மணியே! * மஞ்சனமாட நீ வாராய்! 9

161 * கார்மலி மேனி நிறத்துக்[24] * கண்ண பிரானை உகந்து *
வார்மலி கொங்கை யசோதை * மஞ்சனமாட்டியவாற்றை **
பார்மலி தொல் புதுவைக் கோன் * பட்டர் பிரான் சொன்ன பாடல் *
சீர்மலி செந்தமிழ் வல்லார் * தீவினை யாதும் இலரே 10

---

## திருமஞ்சன காலத்தில் சேர்த்து அனுஸந்திக்கும் பாசுரங்கள்

2046 முன்பொலா இராவணன் தன் * முது மதிள் இலங்கை வேவித்து *
அன்பினால் அனுமன் வந்து * ஆங்கடியிணை பணிய நின்றார்க்கு **

[22] சிற்றுண்டை
[23] கழைகண்டு
[24] நிறத்தன்

என்பெலாம் உருகியுக்கிட்டு * என்னுடை நெஞ்சம் என்னும் *
அன்பினால் ஞான நீர் கொண்டு * ஆட்டுவன் அடியனேனே

**திருக்குறுந்தாண்டகம் 15**

2047 மாய மான் மாயச் செற்று * மருதிற நடந்து * வையம்
தாயமா பரவை பொங்கத் * தடவரை திரித்து ** வானோர்க்கு
ஈயுமால் எம்பிரானார்க்கு * என்னுடைச் சொற்கள் என்னும் *
தூயமா மாலை கொண்டு * சூட்டுவன் தொண்டனேனே

**திருக்குறுந்தாண்டகம் 16**

2498 சூட்டு நன்மாலைகள் * தூயன ஏந்தி * விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி * அந்தூபம் தரா நிற்கவே அங்கு ** ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமிலேற்றுவன் கூன் *
கோட்டிடையாடினை கூத்து * அடலாயர் தம் கொம்பினுக்கே

**திருவிருத்தம் 21**

246 காடுகளூடு போய்க் * கன்றுகள் மேய்த்து மறியோடிக் * கார்க்கோடல்
பூச்சூடி வருகின்ற தாமோதரா! * கற்றுத் தூளி காண் உன் உடம்பு **
பேடை மயிற் சாயல் பின்னை மணாளா! * நீராட்டமைத்து வைத்தேன் *
ஆடி அமுது செய்யப்பனும் உண்டிலன் * உன்னோடுடனே உண்பான்

**பெரியாழ்வார் திருமொழி 3-3-3**

252 திண்ணார் வெண்சங்குடையாய்! * திருநாள் திருவோணம் இன்றேழு
நாள் * முன்
பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப் * பல்லாண்டு
கூறுவித்தேன் **
கண்ணாலம் செய்யக் * கறியும் கலத்ததரிசியும் ஆக்கி வைத்தேன் *
கண்ணா! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல் * கோலம்
செய்திங்கே இரு

**பெரியாழ்வார் திருமொழி 3-3-9**

---

### பெரியாழ்வார் அருளிச் செய்த
## பெரியாழ்வார் திருமொழி 2-7 - ஆநிரை
### (கண்ணனைப் பூச்சூட அழைத்தல்)

182 * ஆநிரை மேய்க்க நீ போதி * அருமருந்து ஆவதறியாய் *
கானகம் எல்லாம் திரிந்து * உன் கரிய திருமேனி வாட **
பானையில் பாலைப் பருகிப் * பற்றாதார் எல்லாம் சிரிப்ப *
தேனில் இனிய பிரானே! * செண்பகப் பூச்சூட்ட வாராய் 1

183 கருவுடை மேகங்கள் கண்டால் * உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள் *

உருவுடையாய்! உலகேழும் * உண்டாக வந்து பிறந்தாய்! *
திருவுடையாள் மணவாளா! * திருவரங்கத்தே கிடந்தாய்! *
மருவி மணம் கமழ்கின்ற * மல்லிகைப் பூச்சூட்ட வாராய் 2

184 மச்சொடு மாளிகை ஏறி * மாதர்கள் தம்மிடம் புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்துக் * காம்பு துகிலவை கீறி **
நிச்சலும் தீமைகள் செய்வாய்! * நீள் திருவேங்கடத்து எந்தாய்! *
பச்சைத் தமனகத்தோடு * பாதிரிப் பூச்சூட்ட வாராய் 3

185 தெருவின்கண் நின்று இளவாய்ச்சிமார்களைத் * தீமை செய்யாதே *
மருவும் தமனகமும் சீர் * மாலை மணம் கமழ்கின்ற **
புருவம் கருங்குழல் நெற்றி * பொலிந்த முகிற் கன்று போலே *
உருவம் அழகிய நம்பீ! * உகந்திவை சூட்ட நீ வாராய் 4

186 புள்ளினை வாய் பிளந்திட்டாய்! * பொருகரியின் கொம்பொசித்தாய்! *
கள்ள அரக்கியை மூக்கொடு * காவலனைத் தலை கொண்டாய்! **
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க * அஞ்சாது அடியேன் அடித்தேன் *
தெள்ளிய நீரில் எழுந்த * செங்கழுநீர் சூட்ட வாராய் 5

187 எருதுகளோடு பொருதி * ஏதும் உலோபாய் காண் நம்பி! *
கருதிய தீமைகள் செய்து * கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்! **
தெருவின்கண் தீமைகள் செய்து * சிக்கென மல்லர்களோடு *
பொருது வருகின்ற பொன்னே! * புன்னைப் பூச்சூட்ட வாராய் 6

188 குடங்கள் எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எம் கோவே! *
மடங்கொள் மதி முகத்தாரை * மால் செய்ய வல்ல என் மைந்தா! **
இடந்திட்டு இரணியன் நெஞ்சை * இரு பிளவாக முன் கீண்டாய்! *
குடந்தைக் கிடந்த எம்[25] கோவே! * குருக்கத்திப் பூச்சூட்ட வாராய் 7

189 சீமாலிகன் அவனோடு * தோழமை கொள்ளவும் வல்லாய்! *
சாமாறு அவனை நீ எண்ணிச் * சக்கரத்தால் தலை கொண்டாய்! **
ஆமாறறியும் பிரானே! * அணி அரங்கத்தே கிடந்தாய்! *
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்! * இருவாட்சிப் பூச்சூட்ட வாராய் 8

190 அண்டத்தமரர்கள் சூழ * அத்தாணியுள் அங்கிருந்தாய்! *
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்! * தூமலராள் மணவாளா! **
உண்டிட்டு உலகினை ஏழும் * ஓர் ஆலிலையில்[26] துயில் கொண்டாய்! *
கண்டு நான் உன்னை உகக்கக் * கருமுகைப் பூச்சூட்ட வாராய் 9

191 * செண்பக மல்லிகையோடு * செங்கழுநீர் இருவாட்சி *

---

[25] என்

[26] ஆலிலைத்

எண்பகர் பூவும் கொணர்ந்தேன் * இன்று இவை சூட்ட வா என்று **
மண்பகர் கொண்டானை * ஆய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம்மாலை *
பண்பகர் வில்லிபுத்தூர்க் கோன் * பட்டர் பிரான் சொன்ன பத்தே 10

---

### பெரியாழ்வார் அருளிச் செய்த

## பெரியாழ்வார் திருமொழி 2-8 - இந்திரனோடு

### (கண்ணனை த்ருஷ்டி தோஷம் வாராதபடி திருவந்திக் காப்பிட அழைத்தல்)

192 * இந்திரனோடு பிரமன் * ஈசன் இமையவர் எல்லாம் *
மந்திர மாமலர் கொண்டு * மறைந்துவராய் வந்து நின்றார் **
சந்திரன் மாளிகை சேரும் * சதுரர்கள் வெள்ளறை நின்றாய்! *
அந்தியம் போது இதுவாகும் * அழகனே! காப்பிட வாராய் 1

193 கன்றுகள் இல்லம் புகுந்து * கதறுகின்ற பசுவெல்லாம் *
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி * நேசமேல் ஒன்றும் இலாதாய்! **
மன்றில் நில்லேல் அந்திப் போது * மதிள் திருவெள்ளறை நின்றாய்! *
நன்று கண்டாய் என்தன் சொல்லு * நான் உன்னைக் காப்பிட வாராய் 2

194 செப்போது மென்முலையார்கள் * சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு *
அப்போது நான் உரப்பப் போய் * அடிசிலுமுண்டிலை ஆள்வாய்! **
முப்போதும் வானவர் ஏத்தும் * முனிவர்கள் வெள்ளறை நின்றாய்! *
இப்போது நான் ஒன்றும் செய்யேன் * எம்பிரான்! காப்பிட வாராய் 3

195 கண்ணில் மணல் கொடு தூவிக் * காலினால் பாய்ந்தனை என்றென்று *
எண்ணரும் பிள்ளைகள் வந்திட்டு * இவரால் முறைப்படுகின்றார் **
கண்ணனே! வெள்ளறை நின்றாய்! * கண்டாரோடே தீமை செய்வாய்! *
வண்ணமே வேலையதொப்பாய்! * வள்ளலே! காப்பிட வாராய் 4

196 பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் * தீமைகள் செய்வார் *
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது[27] * எம்பிரான்! நீ இங்கே வாராய் **
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்! * ஞானச் சுடரே! உன் மேனி *
சொல்லார வாழ்த்தி நின்றேத்திச் * சொப்படக் காப்பிட வாராய் 5

197 கஞ்சன் கறுக்கொண்டு நின் மேல் * கருநிறச் செம்மயிர்ப் பேயை *
வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பதோர் * வார்த்தையும் உண்டு **
மஞ்சு தவழ் மணி மாட * மதிள் திருவெள்ளறை நின்றாய்! *
அஞ்சுவன் நீ அங்கு நிற்க * அழகனே! காப்பிட வாராய் 6

198 கள்ளச் சகடும் மருதும் * கலக்கழிய உதை செய்த *

---

[27] போகா

பிள்ளை அரசே! நீ பேயைப் பிடித்து * முலை உண்ட பின்னை **
உள்ளவாறு ஒன்றும் அறியேன் * ஒளியுடை வெள்ளறை நின்றாய்! *
பள்ளிகொள் போது இதுவாகும் * பரமனே! காப்பிட வாராய் 7

199 இன்பமதனை உயர்த்தாய்! * இமையவர்க்கு என்றும் அரியாய்! *
கும்பக் களிறட்ட கோவே! * கொடுங்கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே! **
செம்பொன் மதிள் வெள்ளறையாய்! * செல்வத்தினால் வளர் பிள்ளாய்! *
கம்பக் கபாலி காண் அங்குக் * கடிதோடிக் காப்பிட வாராய் 8

200 இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு * எழில் மறையோர் வந்து நின்றார் *
தருக்கேல் நம்பி! சந்தி நின்று * தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள் **
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத் * தேசுடை வெள்ளறை நின்றாய்! *
உருக்காட்டும் அந்தி விளக்கு * இன்றொளி கொள்ள ஏற்றுகேன் வாராய் 9

201 * போதமர் செல்வக் கொழுந்து * புணர் திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்த அசோதை * மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம் **
வேதப் பயன் கொள்ள வல்ல * விட்டுசித்தன் சொன்ன மாலை *
பாதப் பயன் கொள்ள வல்ல * பத்தருள்ளார் வினை போமே 10

---

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
## அமலனாதிபிரான்

### அமலனாதிபிரான் தனியன்கள்

### பெரிய நம்பிகள் அருளிச் செய்தது

ஆபாத₃ சூடமநுபூ₄ய ஹரிம் ஷயாநம்
மத்யே₄ கவேர து₃ஹிதுர் முதி₃தாந்தராத்மா |
அத்₃ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிஷ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ||

### திருமலை நம்பிகள் அருளிச் செய்தது

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி *
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் *
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனி புகுந்து *
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
## அமலனாதிபிரான்

## (அழகிய மணவாளனது திருமேனி அழகில் பாதாதி கேஸாந்தமாக ஈடுபடுதல்)

927 * அமலன் ஆதி பிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் * விண்ணவர் கோன் * விரையார் பொழில் வேங்கடவன் **
நிமலன் நின்மலன் நீதி வானவன் * நீள் மதிள் அரங்கத்தம்மான் * திருக்
கமல பாதம் வந்து * என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே[28] 1

928 உவந்த உள்ளத்தனாய் * உலகம் அளந்து அண்டமுற *
நிவந்த நீள் முடியன் * அன்று நேர்ந்த நிசாசரரை **
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் * கடியார் பொழில் அரங்கத்தம்மான் * அரைச்
சிவந்த ஆடையின் மேல் * சென்றதாம் என சிந்தனையே 2

929 * மந்தி பாய் * வட வேங்கட மாமலை * வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவினணையான் **
அந்தி போல் நிறத்தாடையும் * அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில் *
உந்தி மேலதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே 3

930 சதுரமா மதிள் சூழ் * இலங்கைக்கிறைவன் தலை பத்து
உதிர ஓட்டி * ஓர் வெங்கணை உய்த்தவன் * ஓத வண்ணன் **
மதுரமா வண்டு பாட * மாமயில் ஆடரங்கத்தம்மான் * திருவயிற்று
உதர பந்தம்[29] * என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே 4

931 பாரமாய * பழ வினை பற்றறுத்து * என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் * வைத்ததன்றி என்னுள் புகுந்தான் **
கோரமா தவம் செய்தனன் கொல் அறியேன் * அரங்கத்தம்மான் * திரு
ஆர மார்பதன்றோ * அடியேனை ஆட்கோண்டதே 5

932 துண்ட வெண் பிறையன் * துயர் தீர்த்தவன் * அஞ்சிறைய
வண்டு வாழ் பொழில் சூழ் * அரங்க நகர் மேய அப்பன் **
அண்டரண்ட பகிரண்டத்து * ஒரு மாநிலம் எழுமால் வரை * முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் * அடியேனை உய்யக் கொண்டதே 6

933 கையினார் * சுரி சங்கனல் ஆழியர் * நீள் வரை போல்
மெய்யனார் * துளப விரையார் கமழ் நீள் முடி எம்
ஐயனார் ** அணி அரங்கனார் * அரவின் அணை மிசை மேய மாயனார் *
செய்ய வாய் ஐயோ! * என்னைச் சிந்தை கவர்ந்ததுவே 7

---

[28] ஒக்கின்றவே
[29] பந்தனம்

934 பரியனாகி வந்த * அவுணன் உடல் கீண்ட * அமரர்க்கு
அரிய ஆதிப் பிரான் * அரங்கத்தமலன் முகத்து **
கரியவாகிப் புடை பரந்து * மிளிர்ந்து செவ்வரி ஓடி * நீண்ட அப்
பெரியவாய கண்கள் * என்னைப் பேதைமை செய்தனவே! 8

935 * ஆலமா மரத்தின் இலை மேல் * ஒரு பாலகனாய் *
ஞாலம் ஏழும் உண்டான் * அரங்கத்து அரவினணையான் **
கோலமா மணி ஆரமும் * முத்துத் தாமமும் முடிவில்லதோர் எழில் *
நீல மேனி ஐயோ! * நிறை கொண்டது என் நெஞ்சினையே 9

936 * கொண்டல் வண்ணனைக் * கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் * என் உள்ளம் கவர்ந்தானை **
அண்டர் கோன் அணி அரங்கன் * என் அமுதினைக்[30]
கண்ட கண்கள் * மற்றொன்றினைக் காணாவே 10

---

## மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த
## கண்ணிநுண் சிறுத்தாம்பு

### கண்ணிநுண் சிறுத்தாம்புத் தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தவை

அவிதி$_3$தவிஷ$_2$யாந்தர:
ஷட$_2$ரேருபநிஷத$_3$ாமுபக$_3$ாநமாத்ரபே$_4$ாக$_3$: |
அபி ச கு$_3$ணவஷாத்ததே$_3$க$_3$ஷேஷீ$_2$
மது$_4$ரகவிர்ஹ்ருத$_3$யே மமாவிரஸ்து ||

வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த *
மாறன் சடகோபன் வண்குருகூர்- ஏறு * எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வார் அவரே அரண்

## மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த
## கண்ணிநுண் சிறுத்தாம்பு
### (நம்மாழ்வார் விஷயம்)

937 * கண்ணிநுண் சிறுத்தாம்பினால் * கட்டுண்ணப்
பண்ணிய பெரு மாயன் * என் அப்பனில் **

---
[30] அமுதனைக்

நண்ணித் தென்குருகூர் * நம்பி என்றக்கால் *
அண்ணிக்கும் அமுதூறும் * என் நாவுக்கே 1

938 நாவினால் நவிற்று * இன்பம் எய்தினேன் *
மேவினேன் * அவன் பொன்னடி மெய்ம்மையே **
தேவு மற்றறியேன் * குருகூர் நம்பி *
பாவின் இன்னிசை * பாடித் திரிவனே 2

939 திரிதந்தாகிலும் * தேவ பிரானுடை *
கரிய கோலத் * திரு உருக் காண்பன் நான் **
பெரிய வண்குருகூர் * நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் * அடியேன் பெற்ற நன்மையே 3

940 நன்மையால் மிக்க * நான்மறையாளர்கள் *
புன்மையாகக் * கருதுவர் ஆதலின் **
அன்னையாய் அத்தனாய் * என்னை ஆண்டிடும்
தன்மையான் * சடகோபன் என் நம்பியே 4

941 நம்பினேன் * பிறர் நன்பொருள் தன்னையும் *
நம்பினேன் * மடவாரையும் முன்னெலாம் **
செம்பொன் மாடத் * திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் * அடியேன் சதிர்த்தேன் இன்றே 5

942 இன்று தொட்டும் * எழுமையும் எம்பிரான் *
நின்று தன் புகழ் * ஏத்த அருளினான் **
குன்ற மாடத் * திருக்குகூர் நம்பி *
என்றும் என்னை * இகழ்விலன் காண்மினே 6

943 கண்டு கொண்டென்னைக் * காரி மாறப் பிரான் *
பண்டை வல்வினை * பாற்றி அருளினான் **
எண் திசையும் * அறிய இயம்புகேன் *
ஒண் தமிழ் * சடகோபன் அருளையே 7

944 அருள் கொண்டாடும் * அடியவர் இன்புற *
அருளினான் * அவ்வருமறையின் பொருள் **
அருள் கொண்டு * ஆயிரம் இன்தமிழ் பாடினான் *
அருள் கண்டீர் * இவ்வுலகினில் மிக்கதே 8

945 மிக்க வேதியர் * வேதத்தின் உட்பொருள் *
நிற்கப் பாடி * என் நெஞ்சுள் நிறுத்தினான் **
தக்க சீர்ச் * சடகோபன் என் நம்பிக்கு * ஆள்
புக்க காதல் * அடிமைப் பயன் அன்றே 9

946 * பயன் அன்றாகிலும் * பாங்கல்லர் ஆகிலும் *
செயல் நன்றாகத் * திருத்திப் பணி கொள்வான் **
குயில் நின்றார் பொழில் சூழ் * குருகூர் நம்பி! *
முயல்கின்றேன் * உன்தன் மொய்கழற்கு அன்பையே 10

947 * அன்பன் தன்னை * அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் * தென்குருகூர் நகர் நம்பிக்கு **
அன்பனாய் * மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி * வைகுந்தம் காண்மினே 11

---

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# கோவில் திருவாய்மொழி

### திருவாய்மொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

ப$_4$க்தாம்ருதம் விஷ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஷட$_2$கோபவாங்க்மயம் |
ஸஹஸ்ரஷாகே$_2$ாபநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ||

### ஈச்வரமுனிகள் அருளிச் செய்தது

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும் - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடி இணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து

### சொட்டை நம்பிகள் அருளிச் செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை அல்லாது இறைஞ்சேன் - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று

### அனந்தாழ்வான் அருளிச் செய்தது

ஏய்ந்த பெரும் கீர்த்தி இராமானுச முனி தன்
வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேன் - ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும்

பேராத உள்ளம் பெற

**பட்டர் அருளிச் செய்தவை**

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் - ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ் வினையும் வாழ் வினையும் ஓதும் குருகையர் கோன்
யாழின் இசை வேதத்தியல்

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 1-1 - உயர்வற உயர்நலம்

**(எம்பெருமான் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் பண்ணும்படி ஆழ்வார் தம் திருவுள்ளத்துக்கு உபதேசித்தல்)**

2675 * உயர்வற உயர் நலம் * உடையவன் யவன்[31] அவன் *
மயர்வற மதி நலம் * அருளினன் யவன்[32] அவன் **
அயர்வறும் அமரர்கள் * அதிபதி யவன்[33] அவன் *
துயர் அறு சுடர் அடி * தொழுதெழு என் மனனே! 1

2676 மனன் அகம் மலம் அற * மலர் மிசை எழு தரும் *
மனன் உணர்வு அளவிலன் * பொறி உணர்வு அவை இலன் **
இனன் உணர் முழு நலம் * எதிர் நிகழ் கழிவினும் *
இனன் இலன் எனன் உயிர் * மிகு நரை இலனே 2

2677 இலனது உடையனிது * என நினைவு அரியவன் *
நிலனிடை விசும்பிடை * உருவினன் அருவினன் **
புலனொடு புலனலன் * ஒழிவிலன் பரந்த * அந்
நலனுடை ஒருவனை * நணுகினம் நாமே 3

2678 நாம் அவன் இவன் உவன் * அவள் இவள் உவள் எவள் *
தாம் அவர் இவர் உவர் * அது இது உது எது **
வீம் அவை இவை உவை * அவை நலம் தீங்கவை *
ஆமவை ஆயவை ஆய் * நின்ற அவரே 4

[31] எவன்
[32] எவன்
[33] எவன்

2679 அவரவர் தமதமது * அறிவறி வகை வகை *
அவரவர் இறையவர் * என அடி அடைவர்கள் **
அவரவர் இறையவர் * குறைவிலர் இறையவர் *
அவரர்வர் விதி வழி * அடைய நின்றனரே 5

2680 நின்றனர் இருந்தனர் * கிடந்தனர் திரிந்தனர் *
நின்றிலர் இருந்திலர் * கிடந்திலர் திரிந்திலர் **
என்றும் ஓர் இயல்வினர் * என நினைவு அரியவர் *
என்றும் ஓர் இயல்வொடு * நின்ற எம் திடரே 6

2681 திட விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
படர் பொருள் முழுவதுமாய் * அவை அவை தொறும் **
உடல் மிசை உயிர் எனக் * கரந்தெங்கும் பரந்துளன் *
சுடர் மிகு சுருதியுள் * இவை உண்ட சுரனே 7

2682 சுரர் அறிவரு நிலை * விண் முதல் முழுவதும் *
வரன் முதலாய் அவை * முழுதுண்ட பர பரன் **
புரம் ஒரு மூன்றெரித்து * அமரர்க்கும் அறிவு இயந்து *
அரன் அயன் என * உலகழித்து அமைத்துளனே 8

2683 உளன் எனில் உளன் * அவன் உருவம் இவ்வுருவுகள் *
உளன் அலன் எனில் * அவன் அருவம் இவ்வருவுகள் **
உளன் என இலன் என * இவை குணம் உடைமையில் *
உளனிரு தகைமையொடு * ஒழிவிலன் பரந்தே 9

2684 பரந்த தண் பரவையுள் * நீர் தொறும் பரந்துளன் *
பரந்த அண்டம் இதென * நில விசும்பு ஒழிவற **
கரந்த சில் இடம் தொறும் * இடம் திகழ் பொருள் தொறும் *
கரந்தெங்கும் பரந்துளன் * இவை உண்ட கரனே 10

2685 * கர விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
வரன் நவில் திறல் வலி * அளி பொறையாய் நின்ற **
பரன் அடி மேல் * குருகூர்ச் சடகோபன் சொல் *
நிரல் நிறை ஆயிரத்து * இவை பத்தும் வீடே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 1-2 - வீடுமின்

**('பகவத் பக்தியைப் பண்ணி ஆச்ரயியுங்கோள்' என்று பிறர்க்கு உபதேசித்தல்)**

2686 * வீடுமின் முற்றவும் * வீடு செய்து ** உம்முயிர்

வீடுடையானிடை * வீடு செய்ம்மினே[34] 1

2687 மின்னின் நிலையில * மன்னுயிர் ஆக்கைகள் **
என்னும் இடத்து * இறை உன்னுமின் நீரே 2

2688 நீர் நுமது என்றிவை * வேர் முதல் மாய்த்து ** இறை
சேர்மின் உயிர்க்கு * அதன் நேர் நிறை இல்லே 3

2689 இல்லதும் உள்ளதும் * அல்லது அவன் உரு **
எல்லையில் அந்நலம் * புல்கு பற்றற்றே 4

2690 அற்றது பற்றெனில் * உற்றது வீடுயிர் **
செற்றது மன்னுறில் * அற்றிறை பற்றே 5

2691 பற்றிலன் ஈசனும் * முற்றவும் நின்றனன் **
பற்றிலையாய் * அவன் முற்றில் அடங்கே 6

2692 அடங்கெழில் சம்பத்து * அடங்கக் கண்டு ** ஈசன்
அடங்கெழில் அஃதென்று * அடங்குக உள்ளே 7

2693 உள்ளம் உரை செயல் * உள்ள இம்மூன்றையும் **
உள்ளிக் கெடுத்து * இறை உள்ளில் ஒடுங்கே 8

2694 ஒடுங்க அவண் கண் * ஒடுங்கலும் எல்லாம் **
விடும் பின்னும் ஆக்கை * விடும் பொழுது எண்ணே 9

2695 * எண்பெருக்கு அந்நலத்து * ஒண் பொருள் ஈறில **
வண் புகழ் நாரணன் * திண் கழல் சேரே 10

2696 * சேர்த்தடத் * தென் குருகூர்ச் சடகோபன் சொல் **
சீர்த் தொடை ஆயிரத்து * ஓர்த்த இப்பத்தே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 2-10 - கிளரொளி

**(கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும் பொருட்டுத் திருமாலிருஞ்சோலை மலையை ஆச்ரயிக்கும்படி பிறர்க்கு உபதேசித்தல்)**

2886 * கிளரொளி இளமை * கெடுவதன் முன்னம் *
வளரொளி மாயோன் * மருவிய கோயில் **
வளரிளம் பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *

[34] இசைமினே

தளர்விலர் ஆகில்[35] * சார்வது சதிரே 1

2887 சதிர் இள மடவார் * தாழ்ச்சியை மதியாது *
அதிர் குரல் சங்கத்து * அழகர் தம் கோயில் **
மதி தவழ் குடுமி * மாலிருஞ்சோலை *
பதியது ஏத்தி * எழுவது பயனே 2

2888 பயனல்ல செய்து * பயன் இல்லை நெஞ்சே! *
புயல் மழை வண்ணர் * புரிந்துறை கோயில் **
மயல் மிகு பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *
அயல் மலை அடைவது * அது கருமமே 3

2889 கருமவன் பாசம் * கழித்துழன்று உய்யவே *
பெருமலை எடுத்தான் * பீடுறை கோயில் **
வரு மழை தவழும் * மாலிருஞ்சோலை *
திருமலை அதுவே * அடைவது திறமே 4

2890 திறமுடை வலத்தால் * தீவினை பெருக்காது *
அறமுயலாழிப் * படையவன் கோயில் **
மறுவில் வண் சுனை சூழ் * மாலிருஞ்சோலை *
புற மலை சாரப் * போவது கிறியே 5

2891 கிறியென நினைமின் * கீழ்மை செய்யாதே *
உறி அமர் வெண்ணெய் * உண்டவன் கோயில் **
மறியொடு பிணை சேர் * மாலிருஞ்சோலை *
நெறிபட அதுவே * நினைவது நலமே 6

2892 நலமென நினைமின் * நரகழுந்தாதே *
நிலமுனம் இடந்தான் * நீடுறை கோயில் **
மலமறு மதி சேர் * மாலிருஞ்சோலை *
வலமுறை எய்தி * மருவுதல் வலமே 7

2893 வலம் செய்து வைகல் * வலங் கழியாதே *
வலம் செய்யும் * ஆய மாயவன் கோயில் **
வலம் செய்யும் வானோர் * மாலிருஞ்சோலை *
வலம் செய்து நாளும் * மருவுதல் வழக்கே 8

2894 வழக்கென நினைமின் * வல்வினை மூழ்காது *
அழக்கொடியட்டான் * அமர் பெருங் கோயில் **
மழக் களிற்றினம் சேர் * மாலிருஞ்சோலை *
தொழுக் கருதுவதே * துணிவது சூதே 9

[35] ஆகி

2895 சூதென்று களவும் * சூதும் செய்யாதே *
வேதமுன் விரித்தான் * விரும்பிய கோயில் **
மாதுறு மயில் சேர் * மாலிருஞ்சோலை *
போதவிழ் மலையே * புகுவது பொருளே 10

2896 * பொருளென்று இவ்வுலகம் * படைத்தவன் புகழ் மேல் *
மருளில் வண் குருகூர் * வண் சடகோபன் **
தெருள் கொள்ளச் சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்து *
அருளுடையவன் தாள் * அணைவிக்கும் முடித்தே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 3-3 - ஒழிவில் காலம்

**(திருவேங்கடமுடையான் திருவடிகளில் காலமெல்லாம்
வழுவிலா அடிமை செய்யப் பாரித்தல்)**

2919 * ஒழிவில் காலம் எல்லாம் * உடனாய் மன்னி *
வழுவிலா * அடிமை செய்ய வேண்டும் நாம் **
தெழிகுரல் அருவித் * திருவேங்கடத்து *
எழில் கொள் சோதி * எந்தை தந்தை தந்தைக்கே 1

2920 எந்தை தந்தை தந்தை * தந்தை தந்தைக்கும்
முந்தை * வானவர் * வானவர் கோனொடும் **
சிந்து பூ மகிழும் * திருவேங்கடத்து *
அந்தமில் புகழ்க் * கார் எழில் அண்ணலே 2

2921 அண்ணல் மாயன் * அணிகொள் செந்தாமரைக்
கண்ணன் * செங்கனி வாய்க் * கருமாணிக்கம் **
தெண்ணிறைச்[36] சுனை நீர்த் * திருவேங்கடத்து *
எண்ணில் தொல் புகழ் * வானவர் ஈசனே 3

2922 ஈசன் வானவர்க்கு என்பன் * என்றால் * அது
தேசமோ * திருவேங்கடத்தானுக்கு **
நீசனேன் * நிறை ஒன்றுமிலேன் * என் கண்
பாசம் வைத்த * பரஞ்சுடர்ச் சோதிக்கே 4

2923 சோதியாகி * எல்லா உலகும் தொழும் *
ஆதி மூர்த்தி என்றால் * அளவாகுமோ? **
வேதியர் * முழு வேதத்தமுதத்தை *
தீதில் சீர்த் * திருவேங்கடத்தானையே 5

---

[36] தெண்ணிறச்

2924 வேங்கடங்கள் * மெய்ம்மேல் வினை முற்றவும் *
தாங்கள் தங்கட்கு * நல்லனவே செய்வார் **
வேங்கடத்துறைவார்க்கு * நம என்ன
லாம் கடமை * அது சுமந்தார்கட்கே 6

2925 சுமந்து மாமலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
அமர்ந்து வானவர் * வானவர் கோனொடும் **
நமன்றெழும் * திருவேங்கடம் நங்கட்கு *
சமன் கொள் வீடு தரும் * தடங் குன்றமே 7

2926 * குன்றம் ஏந்திக் * குளிர் மழை காத்தவன் *
அன்று ஞாலம் * அளந்த பிரான் ** பரன்
சென்று சேர் * திருவேங்கட மாமலை *
ஒன்றுமே தொழ * நம் வினை ஓயுமே 8

2927 ஓயும் மூப்புப் * பிறப்பு இறப்புப் பிணி *
வீயுமாறு செய்வான் * திருவேங்கடத்து
ஆயன் ** நாள் மலராம் * அடித் தாமரை *
வாயுள்ளும் மனத்துள்ளும் * வைப்பார்கட்கே 9

2928 வைத்த நாள் வரை * எல்லை குறுகிச் சென்று *
எய்த்திளைப்பதன் * முன்னம் அடைமினோ **
பைத்த பாம்பணையான் * திருவேங்கடம் *
மொய்த்த சோலை * மொய்பூந்தடம் தாழ்வரே 10

2929 * தாள் பரப்பி * மண் தாவிய ஈசனை *
நீள் பொழில் குருகூர்ச் * சடகோபன் சொல் **
கேழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
வாழ்வர் வாழ்வெய்தி * ஞாலம் புகழவே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 4-10 - ஒன்றும் தேவும்

**('ஸ்ரீமந் நாராயணனே பரதேவதையாகையால் மற்ற தெய்வங்களை விட்டு அவனையே பற்றுங்கள்' என்று அறுதியிட்டுப் பேசுதல்)**

3106 * ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் * யாதும் இல்லா
அன்று * நான்முகன் தன்னொடு * தேவர் உலகோடு உயிர் படைத்தான் **
குன்றம் போல்மணி மாட நீடு * திருக்குருகூர் அதனுள் *
நின்ற ஆதிப் பிரான் நிற்க * மற்றைத்[37] தெய்வம் நாடுதிரே 1

[37] மற்றெத்

3107 நாடி நீர் வணங்கும் தெய்வமும் * உம்மையும் முன் படைத்தான் *
வீடில் சீர்ப் புகழ் ஆதிப் பிரான் * அவன் மேவி உறை கோயில் **
மாட மாளிகை சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனைப் *
பாடியாடிப் பரவிச் சென்மின்கள் * பல்லுலகீர்! பரந்தே 2

3108 பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து * அன்றுடனே விழுங்கி *
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது கண்டும் * தெளியகில்லீர் **
சிரங்களால் அமரர் வணங்கும் * திருக்குருகூர் அதனுள் *
பரன் திறமன்றிப் பல்லுலகீர்! * தெய்வம் மற்றில்லை பேசுமினே 3

3109 பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் * பிறர்க்கும்
நாயகன் அவனே * கபால நன் மோக்கத்துக் கண்டு கொண்மின் **
தேச மாமதிள் சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனுள் *
ஈசன் பாலோர் அவம் பறைதல் * என்னாவது இலிங்கியர்க்கே? 4

3110 * இலிங்கத்திட்ட புராணத்தீரும் * சமணரும் சாக்கியரும் *
வலிந்து[38] வாது செய்வீர்களும் * மற்று நுந்தெய்வமுமாகி நின்றான் **
மலிந்து செந்நெல் கவரி வீசும் * திருக்குருகூர் அதனுள் *
பொலிந்து நின்ற பிரான் கண்டீர் * ஒன்றும் பொய் இல்லை
போற்றுமினே 5

3111 போற்றி மற்றோர் தெய்வம் * பேணப் புறத்திட்டு * உம்மை இன்னே
தேற்றி வைத்தது * எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை என்றே **
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு * திருக்குருகூர் அதனுள் *
ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர் * அது அறிந்தறிந்தோடுமினே 6

3112 ஓடி ஓடிப் பல பிறப்பும் பிறந்து * மற்றோர் தெய்வம்
பாடி ஆடிப் பணிந்து * பல்படிகால் * வழியேறிக் கண்டீர் **
கூடி வானவர் ஏத்த நின்ற * திருக்குருகூர் அதனுள் *
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு * அடிமை புகுவதுவே 7

3113 புக்கடிமையினால் தன்னைக் கண்ட * மார்க்கண்டேயன் அவனை *
நக்க பிரானும் அன்று உய்யக் கொண்டது * நாராயணன் அருளே **
கொக்கலர் தடந்தாழை வேலித் * திருக்குருகூர் அதனுள் *
மிக்க ஆதிப் பிரான் நிற்க * மற்றைத் தெய்வம் விளம்புதிரே 8

3114 விளம்பும் ஆறு சமயமும் * அவையாகிய மற்றும் தன் பால் *
அளந்து காண்டற்கரியனாகிய * ஆதிப் பிரான் அமரும் **
வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனை *
உளங்கொள் ஞானத்து வைம்மின் * உம்மை உய்யக் கொண்டு
போகுறிலே 9

[38] மலிந்து

3115 உறுவதாவது எத்தேவும் * எவ்வுலகங்களும் மற்றும் தன் பால் *
மறுவில் மூர்த்தியோடொத்து * இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே **
செறுவில் செந்நெல் கரும்பொடோங்கு * திருக்குருகூர் அதனுள் *
குறிய மாணுருவாகிய * நீள் குடக் கூத்தனுக்கு ஆட்செய்வதே 10

3116 * ஆட்செய்த ஆழிப் பிரானைச் சேர்ந்தவன் * வண்குருகூர் நகரான் *
நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன் * மாறன் சடகோபன் **
வேட்கையால் சொன்ன பாடல் * ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார் *
மீட்சியின்றி வைகுந்த மாநகர் * மற்றது கையதுவே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 5-8 - ஆராவமுதே

**(ஆசைப்பட்ட பயன் கிடையாமையால், ஆராவமுதாழ்வாரிடத்தில் ஆழ்வார் தம் அநந்யகதித்வத்தை [வேறெவரும் புகலில்லாமையை] முன்னிட்டுக் கொண்டு தீராத ஆசையுடன் ஆற்றாமை பேசி அலமருதல்)**

3194 * ஆராவமுதே! அடியேன் உடலம்[39] * நின்பால் அன்பாயே *
நீராய் அலைந்து கரைய * உருக்குகின்ற நெடுமாலே! **
சீரார் செந்நெல் கவரி வீசும் * செழுநீர்த் திருக்குடந்தை *
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! * கண்டேன் எம்மானே! 1

3195 எம்மானே! என் வெள்ளை மூர்த்தி! * என்னை ஆள்வானே *
எம்மா உருவும் வேண்டுமாற்றால் * ஆவாய்! எழிலேறே! **
செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண்மலரும் * திருக்குடந்தை *
அம்மா மலர்க் கண் வளர்கின்றானே! * என் நான் செய்கேனே! 2

3196 என் நான் செய்கேன்? யாரே களைகண்? * என்னை என் செய்கின்றாய்? *
உன்னால் அல்லால் யாவராலும் * ஒன்றும் குறை வேண்டேன் **
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய்! * அடியேன் அருவாணாள் *
செந்நாள் எந்நாள்? அந்நாள் * உனதாள் பிடித்தே செலக் காணே 3

3197 செலக்காண் கிற்பார் காணும் அளவும் * செல்லும் கீர்த்தியாய்! *
உலப்பிலானே! * எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி! **
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்! * உன்னைக் காண்பான் நான்
அலப்பாய் * ஆகாசத்தை நோக்கி * அழுவன் தொழுவனே 4

3198 அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் * பாடி அலற்றுவன் *
தழுவல் வினையால் பக்கம் நோக்கி * நாணிக் கவிழ்ந்திருப்பன் **
செழு ஒண் பழனக் குடந்தைக் கிடந்தாய்! * செந்தாமரைக் கண்ணா! *

---

[39] உடலும்

தொழுவனேனை உன தாள் * சேரும் வகையே சூழ் கண்டாய் 5

3199 சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து * உன்னடி சேரும்
ஊழ் கண்டிருந்தே * தூராக் குழி தூர்த்து * எனை நாள் அகன்றிருப்பன்? **
வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்! * வானோர் கோமானே! *
யாழின் இசையே! அமுதே! * அறிவின் பயனே! அரியேறே! 6

3200 அரியேறே! என் அம்பொற் சுடரே! * செங்கண் கரு முகிலே! *
எரியே! பவளக் குன்றே! * நால் தோள் எந்தாய்! உனதருளே **
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்! * குடந்தைத் திருமாலே! *
தரியேன் இனி உன் சரணம் தந்து * என் சன்மம் களையாயே 7

3201 களைவாய் துன்பம் களையாதொழிவாய் * களைகண் மற்றிலேன் *
வளைவாய் நேமிப் படையாய்! * குடந்தைக் கிடந்த மாமாயா! **
தளரா உடலம் எனதாவி * சரிந்து போம்போது *
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்து * போத இசை நீயே 8

3202 இசைவித்து என்னை உன் தாள் இணைக் கீழ் * இருத்தும் அம்மானே! *
அசைவில் அமரர் தலைவர் தலைவா! * ஆதிப் பெரு மூர்த்தி! **
திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் * திருக்குடந்தை *
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்! * காண வாராயே 9

3203 * வாரா வருவாய் வருமென் மாயா! * மாயா மூர்த்தியாய்! *
ஆரா அமுதாய் அடியேன் ஆவி * அகமே தித்திப்பாய் **
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்! * திருக்குடந்தை
ஊரா! * உனக்காட்பட்டும் * அடியேன் இன்னம் உழல்வேனோ? 10

3204 * உழலையென்பின் பேய்ச்சி முலையூடு * அவளை உயிர் உண்டான் *
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட * குருகூர்ச் சடகோபன் **
குழலின் மலியச் சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்தும் *
மழலை தீர வல்லார் * காமர் மானேய் நோக்கியர்க்கே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 6-10 - உலகமுண்ட

**(அலர்மேல் மங்கை புருஷகாரமாகத் திருவேங்கடமுடையானது
திருவடிகளில் சரணம் புகுதல்)**

3326 * உலகமுண்ட பெருவாயா! * உலப்பில் கீர்த்தி அம்மானே! *
நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி! * நெடியாய்! அடியேன் ஆருயிரே! **
திலதம் உலகுக்காய் நின்ற * திருவேங்கடத்து எம்பெருமானே! *
குலதொல் அடியேன் உன பாதம் * கூடுமாறு கூறாயே 1

3327 கூறாய் நீறாய் நிலனாகிக் * கொடு வல்லசுரர் குலம் எல்லாம் *
சீறா எறியும் திருநேமி வலவா! * தெய்வக் கோமானே! **
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் * திருவேங்கடத்தானே! *
ஆறா அன்பில் அடியேன் * உன் அடி சேர் வண்ணம் அருளாயே 2

3328 வண்ணம் அருள் கொள் அணிமேக வண்ணா! * மாய அம்மானே! *
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! * இமையோர் அதிபதியே! **
தெண்ணல் அருவி மணி பொன் முத்தலைக்கும் * திருவேங்கடத்தானே! *
அண்ணலே! உன் அடி சேர * அடியேற்கு[40] ஆவா என்னாயே 3

3329 ஆவா! என்னாது உலகத்தை அலைக்கும் * அசுரர் வாணாள் மேல் *
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா! * திருமாமகள் கேள்வா!
தேவா! ** சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
பூவார் கழல்கள் அருவினையேன் * பொருந்துமாறு புணராயே 4

3330 புணரா நின்ற மரம் ஏழ் * அன்றெய்த ஒரு வில் வலவாவோ! *
புணரேய் நின்ற மரம் இரண்டின் * நடுவே போன முதல்வாவோ! **
திணரார் மேகம் எனக் களிறு சேரும் * திருவேங்கடத்தானே! *
திணரார் சார்ங்கத்து உன பாதம் * சேர்வதடியேன் எந்நாளே? 5

3331 எந்நாளே? நாம் மண் அளந்த * இணைத் தாமரைகள் காண்பதற்கென்று *
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி * இறைஞ்சி இனம் இனமாய் **
மெய் நா மனத்தால் வழிபாடு செய்யும் * திருவேங்கடத்தானே! *
மெய் நான் எய்தி எந்நாள் * உன் அடிக்கண்[41] அடியேன் மேவுவதே? 6

3332 அடியேன் மேவி அமர்கின்ற அமுதே! * இமையோர் அதிபதியே! *
கொடியாவடு புள்ளுடையானே! * கோலக் கனிவாய்ப் பெருமானே! **
செடியார் வினைகள் தீர் மருந்தே! * திருவேங்கடத்து எம்பெருமானே! *
நொடியார் பொழுதும் உன பாதம் * காண நோலாதாற்றேனே 7

3333 நோலாதாற்றேன் உன பாதம் * காண என்று நுண்ணுணர்வின் *
நீலார் கண்டத்து அம்மானும் * நிறை நான்முகனும் இந்திரனும் **
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும் * திருவேங்கடத்தானே! *
மாலாய் மயக்கி அடியேன் பால் * வந்தாய் போலே வாராயே 8

3334 வந்தாய் போலே வாராதாய் * வாராதாய் போல் வருவானே! *
செந்தாமரைக்கண் செங்கனிவாய் * நால்தோள் அமுதே! எனதுயிரே **
சிந்தாமணிகள் பகர் அல்லைப் பகல் செய் * திருவேங்கடத்தானே! *
அந்தோ! அடியேன் உன பாதம் * அகலகில்லேன் இறையுமே 9

---

[40] அடியோர்க்கு
[41] அடிக்கள்

3335 * அகலகில்லேன் இறையும் என்று * அலர்மேல் மங்கை உறை மார்பா! *
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! * என்னை ஆள்வானே! **
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
புகல் ஒன்றில்லா அடியேன் * உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே 10

3336 * அடிக் கீழ் அமர்ந்து புகுந்து * அடியீர்! வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும் *
படிக் கேழில்லாப் பெருமானைப் * பழனக் குருகூர்ச் சடகோபன் **
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் * திருவேங்கடத்துக்கு இவை பத்தும் *
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து * பெரிய வானுள் நிலாவுவரே 11

---

### நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

## திருவாய்மொழி 7-2 - கங்குலும் பகலும்

**(பராங்குச நாயகி பெரிய பெருமாளிடத்து மோஹித்திருக்க, 'இந்நாயகி விஷயமாக என் செய்ய நீர் எண்ணுகின்றீர்?' என்று திருத்தாயார் கேட்கும் பாசுரம்)**

3348 * கங்குலும் பகலும் கண் துயில் அறியாள் *
கண்ணநீர் கைகளால் இறைக்கும் *
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும் *
தாமரைக் கண் என்றே தளரும் **
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு? என்னும் *
இருநிலம் கைதுழா இருக்கும் *
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்கின்றாயே? 1

3349 என் செய்கின்றாய்? என் தாமரைக் கண்ணா!
என்னும் * கண்ணீர் மல்க இருக்கும் *
என் செய்கேன்? எறிநீர்த் திருவரங்கத்தாய்!
என்னும் * வெவ்வுயிர்த்துயிர்த்து உருகும் **
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும் *
முகில் வண்ணா! தகுவதோ?[42] என்னும் *
முன் செய்து இவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்! *
என் கொலோ முடிகின்றது இவட்கே? 2

3350 வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும் *
வானமே நோக்கும் மையாக்கும் *
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட *
ஒருவனே! என்னும் உள் உருகும் **
கட்கிலீ! உன்னைக் காணுமாறு அருளாய் *

---

[42] தகவிதோ

காகுத்தா! கண்ணனே! என்னும் *
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்திட்டாயே? 3

3351 இட்ட கால் இட்ட கையளாய்[43] இருக்கும் *
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும் *
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும் *
கடல் வண்ணா! கடியை காண் என்னும் **
வட்டவாய் நேமி வலங்கையா! என்னும் *
வந்திடாய் என்றென்றே மயங்கும் *
சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் சிந்தித்தாயே? 4

3352 சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் *
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும் * ஆங்கே மழைக் கண்ணீர் மல்க *
வந்திடாய் என்றென்றே மயங்கும் **
அந்திப் போது அவுணன் உடல் இடந்தானே!
அலைகடல் கடைந்த ஆரமுதே *
சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த *
தையலை மையல் செய்தானே! 5

3353 மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே!
என்னும் * மா மாயனே! என்னும் *
செய்ய வாய் மணியே! என்னும் * தண் புனல் சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும் **
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் *
விண்ணோர் முதல்! என்னும் *
பைகொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய் *
பாவியேன் செய்யற்பாலதுவே 6
3354 பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்! *
பற்றிலார் பற்ற நின்றானே! *
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட *
கடல் வண்ணா! கண்ணணே! என்னும் **
சேல்கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
என்னும் * என் தீர்த்தனே! என்னும் *
கோலமா மழைக் கண் பனி மல்க இருக்கும் *
என்னுடைக் கோமளக் கொழுந்தே 7

3355 கொழுந்து வானவர்கட்கு! என்னும் * குன்றேந்திக்
கோநிரை காத்தவன்! என்னும் *

[43] கைகளாய்

அமும் தொழும் ஆவி அனலவெவ்வுயிர்க்கும் *
அஞ்சன வண்ணனே! என்னும் **
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் *
எங்ஙனே நோக்குகேன்? என்னும் *
செழும் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்! *
என் செய்கேன் என் திருமகட்கே? 8

3356 * என் திருமகள் சேர் மார்வனே! என்னும்
என்னுடை ஆவியே! என்னும் *
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட *
நிலமகள் கேள்வனே! என்னும் **
அன்றுருவேழும்[44] தழுவி நீ கொண்ட *
ஆய்மகள் அன்பனே! என்னும் *
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே! *
தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே 9

3357 முடிவு இவள் தனக்கு ஒன்றறிகிலேன் என்னும் *
மூவுலகாளியே! என்னும் *
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும் *
நான்முகக் கடவுளே! என்னும் **
வடிவுடை வானோர் தலைவனே! என்னும் *
வண்திருவரங்கனே! என்னும் *
அடி அடையாதாள் போல் இவள் அணுகி
அடைந்தனள் * முகில் வண்ணன் அடியே 10

3358 * முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி
உய்ந்தவன் * மொய்புனல் பொருநல் *
துகில் வண்ணத் தூநீர்ச் சேர்ப்பன் * வண்பொழில் சூழ்
வண்குருகூர்ச் சடகோபன் **
முகில் வண்ணன் அடி மேல் சொன்ன சொல் மாலை *
ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர் * பேரின்ப வெள்ளத்தே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 8-10 - நெடுமாற்கடிமை

**(அநந்யார்ஹஶேஷத்வத்துக்கு எல்லை நிலமான பாகவத ஶேஷத்வம் தமக்கு விளைந்ததை ஆழ்வார் பேசுதல்)**

[44] அன்றுருமேழும்

3546 * நெடுமாற்கடிமை செய்வேன் போல் * அவனைக் கருத வஞ்சித்து *
தடுமாற்றற்ற தீக்கதிகள் * முற்றும் தவிர்ந்த சதிர் நினைந்தால் **
கொடுமா வினையேன் அவன் அடியார் அடியே * கூடும் இது அல்லால் *
விடுமாறென்பதென்? அந்தோ! * வியன் மூவுலகு பெறினுமே 1

3547 வியன் மூவுலகு பெறினும் போய்த் * தானே தானே ஆனாலும் *
புயல் மேகம் போல் திருமேனி அம்மான் * புனை பூங்கழல் அடிக் கீழ் **
சயமே அடிமை தலை நின்றார் * திருத்தாள் வணங்கி * இம்மையே
பயனே இன்பம் யான் பெற்றது * உறுமோ பாவியேனுக்கே 2

3548 உறுமோ பாவியேனுக்கு? * இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய *
சிறுமா மேனி நிமிர்த்த * என் செந்தாமரைக் கண் திருக்குறளன் **
நறுமா விரை நாள் மலரடிக் கீழ்ப் * புகுதல் அன்றி அவன் அடியார் *
சிறுமா மனிசராய் என்னை ஆண்டார் * இங்கே திரியவே 3

3549 இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென்? * இருமாநிலம் முன் உண்டுமிழ்ந்த *
செங்கோலத்த பவள வாய்ச் * செந்தாமரைக் கண் என் அம்மான் **
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப் * புலன் கொள் வடிவு என் மனத்ததாய் *
அங்கேய் மலர்கள் கையவாய் * வழிபட்டோட அருளிலே 4

3550 வழிபட்டோட அருள் பெற்று * மாயன் கோல மலரடிக் கீழ் *
சுழிபட்டோடும் சுடர்ச் சோதி வெள்ளத்து * இன்புற்றிருந்தாலும் **
இழிபட்டோடும் உடலினில் பிறந்து * தன் சீர் யான் கற்று *
மொழிபட்டோடும் கவி அமுதம் * நுகர்ச்சி உறுமோ? முழுதுமே 5

3551 நுகர்ச்சி உறுமோ? மூவுலகின் * வீடு பேறு தன் கேழில் *
புகர்ச் செம்முகத்த களிறட்ட * பொன் ஆழிக் கை என் அம்மான் **
நிகர்ச் செம்பங்கி எரி விழிகள் * நீண்ட அசுரர் உயிர் எல்லாம் *
தகர்த்துண்டு உழலும் புட்பாகன் * பெரிய தனி மாப் புகழே? 6

3552 தனிமாப் புகழே எஞ்ஞான்றும் * நிற்கும்படியாத் தான் தோன்றி *
முனிமாப் பிரம முதல் வித்தாய் * உலகம் மூன்றும் முளைப்பித்த **
தனிமாத் தெய்வத் தளிரடிக் கீழ்ப் * புகுதல் அன்றி அவன் அடியார் *
நனிமாக் கலவி இன்பமே * நாளும் வாய்க்க நங்கட்கே 7

3553 நாளும் வாய்க்க நங்கட்கு * நளிர் நீர்க் கடலைப் படைத்து * தன்
தாளும் தோளும் முடிகளும் * சமனிலாத பல பரப்பி **
நீளும் படர் பூங்கற்பகக் காவும் * நிறை பன்னாயிற்றின் *
கோளுமுடைய மணிமலை போல் * கிடந்தான் தமர்கள் கூட்டமே 8

3554 தமர்கள் கூட்ட வல்வினையை * நாசம் செய்யும் சதிர்[45] மூர்த்தி *

---

[45] சது

அமர்கொள் ஆழி சங்கு வாள் * வில் தண்டாதி பல் படையன் **
குமரன் கோல ஐங்கணை வேள் தாதை * கோதில் அடியார் தம் *
தமர்கள் தமர்கள் தமர்களாம் * சதிரே வாய்க்க தமியேற்கே 9

3555 வாய்க்க தமியேற்கு ஊழி தோறூழி * ஊழி மாகாயாம் *
பூக்கொள் மேனி நான்கு தோள் * பொன் ஆழிக் கை என் அம்மான் **
நீக்கமில்லா அடியார் தம் * அடியார் அடியார் அடியார் எங்
கோக்கள் * அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் * நல்ல கோட்பாடே 10

3556 * நல்ல கோட்பாட்டுலகங்கள் * மூன்றின் உள்ளும் தான் நிறைந்த *
அல்லிக் கமலக் கண்ணனை * அந்தண் குருகூர்ச் சடகோபன் **
சொல்லப்பட்ட ஆயிரத்துள் * இவையும் பத்தும் வல்லார்கள் *
நல்ல பதத்தால் மனை வாழ்வர் * கொண்ட பெண்டிர் மக்களே 11

---

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-10 - மாலை நண்ணி

**('நீர் விரும்பியவை யாவும் உமது இவ்வுடம்பு முடியும் போது தருவேன்' என்று ஆழ்வாருக்கு எம்பெருமான் அருள, அவர் உவந்து, திருக்கண்ணபுரத்திலே சென்று அவனைச் சேருமாறு பிறர்க்கு உபதேசித்தல்)**

3656 * மாலை நண்ணித் * தொழுதெழுமினோ வினை கெட *
காலை மாலை * கமல மலர் இட்டு நீர் **
வேலை மோதும் மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து *
ஆலின் மேலால் அமர்ந்தான் * அடி இணைகளே 1

3657 கள்ளவிழும் மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் *
நள்ளி சேரும் வயல் சூழ் * கிடங்கின் புடை **
வெள்ளி ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
உள்ளி * நாளும் தொழுதெழுமினோ தொண்டரே! 2

3658 தொண்டர்! நுந்தம் * துயர் போக நீர் ஏகமாய் *
விண்டு வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வண்டு பாடும் பொழில் சூழ் * திருக்கண்ணபுரத்து
அண்ட வாணன் * அமரர் பெருமானையே 3

3659 மானை நோக்கி * மடப் பின்னை தன் கேள்வனை *
தேனை வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வானை உந்தும் மதிள் சூழ் * திருக்கண்ணபுரம் *
தான் நயந்த பெருமான் * சரணாகுமே 4

3660 சரணமாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *

மரணமானால் * வைகுந்தம் கொடுக்கும் பிரான் **
அரண் அமைந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்
தரணியாளன் * தனதன்பர்க்கு அன்பாகுமே 5

3661 அன்பனாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *
செம்பொன் ஆகத்து * அவுணன் உடல் கீண்டவன் **
நன்பொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து
அன்பன் * நாளும் தன் மெய்யர்க்கு மெய்யனே 6

3662 மெய்யனாகும் * விரும்பித் தொழுவார்க்கெல்லாம் *
பொய்யனாகும் * புறமே தொழுவார்க்கெல்லாம் **
செய்யில் வாளை உகளும் * திருக்கண்ணபுரத்து
ஐயன் * ஆகத்தணைப்பார்கட்கு அணியனே 7

3663 அணியனாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *
பிணியும் சாரா * பிறவி கெடுத்தாளும் **
மணிபொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
பணிமின் * நாளும் பரமேட்டி தன் பாதமே 8

3664 பாதம் நாளும் * பணியத் தணியும் பிணி *
ஏதம் சாரா * எனக்கேல் இனி என் குறை? **
வேத நாவர் விரும்பும் * திருக்கண்ணபுரத்து
ஆதியானை * அடைந்தார்க்கு அல்லல் இல்லையே 9

3665 இல்லை அல்லல் * எனக்கேல் இனி என் குறை? *
அல்லி மாதர் அமரும் * திருமார்பினன் **
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும் துயர் பாடு சாராவே 10

3666 * பாடு சாரா * வினை பற்றற வேண்டுவீர் *
மாட நீடு * குருகூர்ச் சடகோபன் ** சொல்
பாடலான தமிழ் * ஆயிரத்துள்[46] இப்பத்தும் *
பாடி ஆடிப் * பணிமின் அவன் தாள்களே[47] 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 10-9 - சூழ் விசும்பு

**(பரஜ்ஞானத்தைப் பெற்ற ஆழ்வார் எம்பெருமானால் அர்ச்சிராதிகதியைக் காட்டப் பெற்று, திருநாட்டுக்குச் சென்று அடியாரோடு சேர்ந்தமையை மயர்வற்ற மதிநலத்தால் கண்டு அருளிச் செய்தல்)**

[46] ஆயிரத்து
[47] தாள்களையே

3755 * சூழ் விசும்பு அணிமுகில் * தூரியம் முழக்கின *
ஆழ் கடல் அலை திரை * கை எடுத்தாடின **
ஏழ் பொழிலும் * வளம் ஏந்திய என் அப்பன் *
வாழ் புகழ் நாரணன் * தமரைக் கண்டுகந்தே 1

3755 நாரணன் தமரைக் கண்டுகந்து * நன்னீர் முகில் *
பூரண பொற்குடம் * பூரித்தது உயர் விண்ணில் **
நீரணி கடல்கள் * நின்றார்த்தன * நெடு வரைத்
தோரணம் நிரைத்து * எங்கும் தொழுதனர் உலகே 2

3755 தொழுதனர் உலகர்கள் * தூப நல் மலர் மழை
பொழிவனர் * பூமி அன்றளந்தவன் தமர் முன்னே **
எழுமின் என்று இரு மருங்கிசைத்தனர் * முனிவர்கள் *
வழி இது வைகுந்தர்க்கென்று * வந்தெதிரே 3

3755 எதிரெதிர் இமையவர் * இருப்பிடம் வகுத்தனர் *
கதிரவர் அவரவர் * கைநிரை காட்டினர் **
அதிர் குரல் முரசங்கள் * அலை கடல் முழக்கொத்த *
மது விரி துழாய் முடி * மாதவன் தமர்க்கே 4

3755 மாதவன் தமர் என்று * வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் * புகுதுக என்றலும் **
கீதங்கள் பாடினர் * கின்னரர் கெருடர்கள் *
வேத நல் வாயவர் * வேள்வியுள் மடுத்தே 5

3755 வேள்வியுள் மடுத்தலும் * விரை கமழ் நறும் புகை *
காளங்கள் வலம்புரி * கலந்தெங்கும் இசைத்தனர் **
ஆண்மின்கள் வானகம் * ஆழியான் தமர் என்று *
வாளொண் கண் மடந்தையர் * வாழ்த்தினர் மகிழ்ந்தே 6

3755 மடந்தையர் வாழ்த்தலும் * மருதரும் வசுக்களும் *
தொடர்ந்தெங்கும் * தோத்திரம் சொல்லினர் * தொடு கடல்
கிடந்த என் கேசவன் * கிளரொளி மணிமுடி *
குடந்தை என் கோவலன் * குடி அடியார்க்கே 7

3755 குடி அடியார் இவர் * கோவிந்தன் தனக்கென்று *
முடியுடை வானவர் * முறை முறை எதிர் கொள்ள **
கொடி அணி நெடு மதிள் * கோபுரம் குறுகினர் *
வடிவுடை மாதவன் * வைகுந்தம் புகவே 8

3755 வைகுந்தம் புகுதலும் * வாசலில் வானவர் *
வைகுந்தன் தமர் எமர் * எமதிடம் புகுதென்று **

வைகுந்தத்து அமரரும் * முனிவரும் வியந்தனர் *
வைகுந்தம் புகுவது * மண்ணவர் விதியே 9

3755 விதி வகை புகுந்தனர் என்று * நல் வேதியர் *
பதியினில் பாங்கினில் * பாதங்கள் கழுவினர் **
நிதியுநற் சுண்ணமும் * நிறை குட விளக்கமும் *
மதி முக மடந்தையர் * ஏந்தினர் வந்தே 10

3755 * வந்தவர் எதிர் கொள்ள * மாமணி மண்டபத்து *
அந்தமில் பேரின்பத்து * அடியரோடு இருந்தமை **
கொந்தலர் பொழில் * குருகூர்ச் சடகோபன் * சொல்
சந்தங்கள் ஆயிரத்து * இவை வல்லார் முனிவரே 11

---

**நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய**

## திருவாய்மொழி 10-10 - முனியே

**(ஆழ்வார் பரமபக்தியால் நைந்து திருமாலைத் தாம் சேர்ந்தமையை அருளிச் செய்து, திருவாய்மொழியைத் தலைக்கட்டுதல்)**

3766 * முனியே! நான்முகனே! * முக்கண்ணப்பா! * என் பொல்லாக்
கனி வாய்த் * தாமரைக் கண் கருமாணிக்கமே! என் கள்வா! **
தனியேன் ஆருயிரே! * என் தலைமிசையாய் வந்திட்டு **
இனி நான் போகலொட்டேன் * ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே 1

3767 மாயம் செய்யேல் என்னை * உன் திருமார்வத்து மாலை நங்கை *
வாசம் செய் பூங்குழலாள் * திருவாணை நின் ஆணை கண்டாய் **
நேசம் செய்து உன்னோடு என்னை * உயிர் வேறின்றி ஒன்றாகவே *
கூசம் செய்யாது கொண்டாய் * என்னைக் கூவிக் கொள்ளாய் -
வந்தந்தோ! 2

3768 கூவிக் கொள்ளாய் வந்தந்தோ! * என் பொல்லாக் கருமாணிக்கமே! *
ஆவிக்கோர் பற்றுக் கொம்பு * நின்னலால் அறிகின்றிலேன் நான் **
மேவித் தொழும் பிரமன் சிவன் * இந்திரன் ஆதிக்கெல்லாம் *
நாவிக் கமல முதற் கிழங்கே! * உம்பர் அந்தததுவே 3

3769 உம்பர் அந்தண் பாழேயோ! * அதனுள் மிசை நீயேயோ! *
அம்பர நற்சோதி! * அதனுள் பிரமன் அரன் நீ **
உம்பரும் யாதவரும் படைத்த * முனிவன் அவன் நீ *
எம்பரம் சாதிக்கலுற்று * என்னைப் போர விட்டிட்டாயே 4

3770 போர விட்டிட்டு என்னை * நீ புறம் போக்கலுற்றால் * பின்னை யான்
ஆரைக் கொண்டு எந்தையந்தோ! * எனதென்பதென்? யான் என்பதென்? **

தீர இரும்புண்ட நீரது போல * என் ஆருயிரை
ஆரப் பருக * எனக்கு ஆராவமுதானாயே 5

3771 எனக்காராவமுதாய் * எனதாவியை இன்னுயிரை *
மனக்காராமை மன்னி உண்டிட்டாய் * இனி உண்டொழியாய் **
புனக்காயா நிறத்த * புண்டரீகக் கண் செங்கனி வாய் *
உனக்கேற்கும் கோல மலர்ப் பாவைக்கு * அன்பா! என் அன்பேயோ! 6

3772 * கோல மலர்ப் பாவைக்கன்பாகிய * என் அன்பேயோ! *
நீல வரை இரண்டு பிறை கவ்வி * நிமிர்ந்ததொப்ப **
கோல வராகம் ஒன்றாய் * நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்! *
நீலக் கடல் கடைந்தாய் * உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ? 7

3773 பெற்று இனிப் போக்குவனோ? * உன்னை என் தனிப் பேருயிரை *
உற்ற இருவினையாய் * உயிராய்ப் பயனாய் அவையாய் **
முற்ற இம்மூவுலகும் * பெருந்தூறாய்த் தூற்றில் புக்கு *
முற்றக் கரந்தொளித்தாய்! * என் முதல் தனி வித்தேயோ! 8

3774 முதல் தனி வித்தேயோ! * முழு மூவுலகாதிக்கெல்லாம் *
முதல் தனி உன்னையுன்னை * எனை நாள் வந்து கூடுவன் நான்? **
முதல் தனி அங்குமிங்கும் * முழு முற்றுறு வாழ் பாழாய் *
முதல் தனி சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த * முடிவிலீயோ! 9

3775 * சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த * முடிவில் பெரும் பாழேயோ! *
சூழ்ந்ததனில் பெரிய * பர நன்மலர்ச் சோதீயோ! **
சூழ்ந்ததனில் பெரிய * சுடர் ஞான இன்பமேயோ! *
சூழ்ந்ததனில் பெரிய * என் அவா அறச் சூழ்ந்தாயே! 10

3776 * அவா அறச் சூழ் * அரியை அயனை அரனை அலற்றி *
அவா அற்று வீடு பெற்ற * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
அவாவில் அந்தாதிகளால் * இவை ஆயிரமும் * முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்தறிந்தார் * பிறந்தார் உயர்ந்தே 11

---

**திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த**
**ப்ரபந்ந காயத்ரி என்னும்**

## இராமானுச நூற்றந்தாதி

### இராமானுச நூற்றந்தாதித் தனியன்கள்

**வேதப் பிரான் பட்டர் அருளிச் செய்தவை**

முன்னை வினை அகல மூங்கிற் குடி அமுதன் *
பொன்னங் கழற் கமலப் போதிரண்டும் * - என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் * தென் புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்?

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதின்றி[48] நண்ணினர்[49] பால் *
சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாளிணை மேல் *
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுது ஓங்கும் அன்பால்
இயம்பும் * கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே!

[50]இனி என் குறை நமக்கு? எம்பெருமானார் திருநாமத்தால் *
முனி தந்த நூற்றெட்டுச் சாவித்திரி என்னு நுண்பொருளை *
கனி தந்த செஞ்சொல் கலித்துறை அந்தாதி பாடித் தந்தான் *
புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே

### அபியுக்தர் அருளிச் செய்தது

சொல்லின் தொகை கொண்டு உனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும் *
நல்லன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்தன் நாவின் உள்ளே *
அல்லும் பகலும் அமரும்படி நல்கு அறு சமயம்
வெல்லும் பரம! * இராமானுச! இது என் விண்ணப்பமே

### திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த
### ப்ரபந்ந காயத்ரி என்னும்
## இராமானுச நூற்றந்தாதி

* பூ மன்னு மாது பொருந்திய மார்பன் * புகழ் மலிந்த
பா மன்னு மாறன் * அடி பணிந்துய்ந்தவன் ** பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் * சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ * நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே 1

* கள்ளார் பொழில் தென்னரங்கன் * கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா * மனிசரை நீங்கி ** குறையல் பிரான் அடிக் கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் * மிக்க சீலம் அல்லால்
உள்ளாது என் நெஞ்சு * ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே 2

பேரியல் நெஞ்சே! * அடி பணிந்தேன் உன்னை * பேய்ப் பிறவிப்

[48] பழுதென்று
[49] நண்ணினன்
[50] இத்தனியன் மிகுதியாக வழங்குவதில்லை

பூரியரோடுள்ள * சுற்றம் புலத்திப்[51] ** பொருவரும் சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கன்பு செய்யும் *
சீரிய பேறுடையார் * அடிக் கீழ் என்னைச் சேர்த்ததற்கே 3

என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி * மருள் சுரந்த
முன்னைப் பழவினை வேரறுத்து ** ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமானுசன் * பரன் பாதமும் என்
சென்னித் தரிக்க வைத்தான் * எனக்கேதும் சிதைவில்லையே 4

எனக்குற்ற செல்வம் இராமானுசன் என்று * இசையகில்லா
மனக்குற்ற மாந்தர் * பழிக்கில் புகழ் ** அவன் மன்னிய சீர்
தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா *
இனக்குற்றம் காணகில்லார் * பத்தி ஏய்ந்த இயல்விதென்றே[52] 5

இயலும் பொருளும் இசையத் தொடுத்து * ஈன்கவிகள் அன்பால்
மயல் கொண்டு வாழ்த்தும் * இராமானுசனை ** மதி இன்மையால்
பயிலும் கவிகளில் பத்தியில்லாத என் பாவி நெஞ்சால் *
முயல்கின்றனன் * அவன் தன் பெருங் கீர்த்தி மொழிந்திடவே 6

* மொழியைக் கடக்கும் பெரும் புகழான் * வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் * நம்[53] கூரத்தாழ்வான் சரண் கூடிய பின் **
பழியைக் கடத்தும் இராமானுசன் * புகழ் பாடி அல்லா
வழியைக் கடத்தல் * எனக்கினியாதும் வருத்தமன்றே 7

வருத்தும் புறவிருள் மாற்ற * எம் பொய்கைப் பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் * செந்தமிழ் தன்னையும் கூட்டி ** ஒன்றத்
திரித்தன்றெரித்த திருவிளக்கைத் தன் திரு உள்ளத்தே *
இருத்தும் பரமன் * இராமானுசன் எம் இறையவனே 8

இறைவனைக் காணும் இதயத்திருள் கெட * ஞானம் என்னும்
நிறை விளக்கேற்றிய * பூதத் திருவடி தாள்கள் ** நெஞ்சத்
துறைய வைத்தாளும் இராமானுசன் * புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து * இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே 9

மன்னிய பேரிருள் மாண்ட பின் * கோவலுள் மாமலராள்
தன்னொடு மாயனைக் * கண்டமை காட்டும் ** தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர் தாள் *
சென்னியில் சூடும் * திரு உடையார் என்றும் சீரியரே 10

---

[51] புலர்த்தி
[52] இயலிதென்றே
[53] கடத்தும் எம்

சீரிய நான்மறைச் செம்பொருள் * செந்தமிழால் அளித்த
பாரியலும் புகழ்ப் * பாண் பெருமாள் ** சரணாம் பதுமத்
தாரியல் சென்னி இராமானுசன் தன்னைச் சார்ந்தவர் தம் *
காரிய[54] வண்மை * என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே 11

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப் போது
அடங்கும் * இதயத்து இராமானுசன் ** அம்பொற் பாதம் என்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல் செய்யாத் *
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேன் அன்பு செய்வதுவே 12

செய்யும் பசுந்துளவத் தொழில் மாலையும் * செந்தமிழில்
பெய்யும் * மறைத் தமிழ் மாலையும் ** பேராத சீர் அரங்கத்து
ஐயன் கழற்கணியும் பரன் தாள் அன்றி * ஆதரியா
மெய்யன் * இராமானுசன் சரணே கதி வேறெனக்கே 13

கதிக்குப் பதறி * வெங்கானமும் கல்லும் கடலும் எல்லாம்
கொதிக்கத் * தவம் செய்யும் கொள்கை அற்றேன் ** கொல்லி
காவலன் சொல்
பதிக்கும் கலைக் கவி பாடும் பெரியவர் பாதங்களே *
துதிக்கும் பரமன் * இராமானுசன் என்னைச் சோர்விலனே 14

சோராத காதல் பெருஞ் சுழிப்பால் * தொல்லை மாலை ஒன்றும்
பாராது அவனைப் * பல்லாண்டென்று காப்பிடும் ** பான்மையன் தாள்
பேராத உள்ளத்து இராமானுசன் தன் பிறங்கிய சீர் *
சாரா மனிசரைச் சேரேன் * எனக்கு என்ன தாழ்வினியே? 15

* தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து * தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து * அளித்தவன் காண்மின் ** அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் *
வாழ்கின்ற வள்ளல் * இராமானுசன் என்னும் மாமுனியே 16

முனியார் துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் * கண்ண மங்கை நின்றானை ** கலை பரவும்
தனி யானையைத் தண் தமிழ் செய்த நீலன் தனக்கு * உலகில்
இனியானை * எங்கள் இராமானுசனை வந்தெய்தினரே 17

எய்தற்கரிய மறைகளை * ஆயிரம் இன்தமிழால்
செய்தற்கு உலகில் வரும் * சடகோபனை ** சிந்தை உள்ளே
பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம் *
உய்தற்கு உதவும் * இராமானுசன் எம் உறுதுணையே 18

[54] காரியல்

உறுபெரும் செல்வமும் தந்தையும் தாயும் * உயர் குருவும்
வெறி தரு * பூமகள் நாதனும் ** மாறன் விளங்கிய சீர்
நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்று இந்நீணிலத்தோர் *
அறிதர நின்ற * இராமானுசன் எனக்கு ஆரமுதே 19

ஆரப் பொழில் தென் குருகைப் பிரான் * அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் * இசை உணர்ந்தோர்கட்கு ** இனியவர் தம்
சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை * நெஞ்சால்
வாரிப் பருகும் * இராமானுசன் என்தன் மாநிதியே 20

நிதியைப் பொழியும் முகில் என்று * நீசர் தம் வாசல் பற்றித் *
துதிகற்று உலகில் துவள்கின்றிலேன் இனி ** தூய் நெறி சேர்
எதிகட்கிறைவன் யமுனைத் துறைவன் இணை அடியாம் *
கதி பெற்றுடைய * இராமானுசன் என்னைக் காத்தனனே 21

கார்த்திகையானும் கரி முகத்தானும் * கனலும் முக்கண்
மூர்த்தியும் * மோடியும் வெப்பும் முதுகிட்டு ** மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த *
தீர்த்தனை ஏத்தும் * இராமானுசன் என்தன் சேம வைப்பே 22

வைப்பாய வான்பொருள் என்று * நல்லன்பர் மனத்தகத்தே *
எப்போதும் வைக்கும் இராமானுசனை ** இரு நிலத்தில்
ஒப்பார் இலாத உறுவினையேன்[55] வஞ்ச நெஞ்சில் வைத்து *
முப்போதும் வாழ்த்துவன் * என்னாம் இது அவன் மொய் புகழ்க்கே? 23

மொய்த்த என்[56] தீவினையால்[57] * பல்லுடல் தொறும் மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் * முன நாள்கள் எல்லாம் ** இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவியக் *
கைத்த மெய்ஞ் ஞானத்து * இராமானுசன் என்னும் கார் தன்னையே 24

காரேய் கருணை இராமானுச! * இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர் * நின் அருளின் தன்மை ** அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்த பின் * உன்
சீரே உயிர்க்குயிராய் * அடியேற்கு இன்று தித்திக்குமே 25

திக்குற்ற கீர்த்தி இராமானுசனை * என் செய் வினையாம்
மெய்க் குற்றம் நீக்கி * விளங்கிய மேகத்தை ** மேவு நல்லோர்
எக்குற்றவாளர் எது பிறப்பு ஏதியல்வாக நின்றோர் *
அக்குற்றம் அப்பிறப்பு * அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே 26

[55] அருவினையேன்
[56] வெந்
[57] தீவினையார்

கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்து விட்டோங்கிய உன்
வள்ளல் தனத்தினால் * வல்வினையேன் மனம் நீ புகுந்தாய் **
வெள்ளைச் சுடர் விடும் உன் பெரு மேன்மைக்கு இழுக்கிதென்று *
தள்ளுற்றிரங்கும் * இராமானுச! என் தனி நெஞ்சமே 27

நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனைக் காய்ந்த நிமலன் * நங்கள்
பஞ்சித் திருவடிப் * பின்னை தன் காதலன் ** பாதம் நண்ணா
வஞ்சர்க்கரிய இராமானுசன் * புகழ் அன்றி என் வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்ன வாழ்வு இன்று கூடியதே! 28

கூட்டும் விதி என்று[58] கூடும் கொலோ? * தென் குருகைப் பிரான்
பாட்டென்னும் * வேதப் பசுந்தமிழ் தன்னைத் ** தன் பத்தி என்னும்
வீட்டின் கண் வைத்த இராமானுசன் * புகழ் மெய் உணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை * என் நாட்டங்கள் கண்டு இன்பம் எய்திடவே 29

இன்பம் தரு பெரு வீடு வந்தெய்திலென்? * எண்ணிறந்த
துன்பம் தரு * நிரயம் பல சூழிலென்? ** தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கு இறையவன் மாயன் என மொழிந்த *
அன்பன் அனகன் * இராமானுசன் என்னை ஆண்டனனே 30

* ஆண்டுகள் நாள் திங்களாய் * நிகழ் காலம் எல்லாம் மனமே!
ஈண்டு * பல் யோனிகள் தோறுழல்வோம் ** இன்றோரெண்ணின்றியே
காண்தகு தோள் அண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப் *
பூண்ட அன்பாளன் * இராமானுசனைப் பொருந்தினமே 31

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் * நல்ல
திருந்திய ஞானமும் * செல்வமும் சேரும் ** செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் * வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே 32

அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன் * கை ஆழி என்னும்
படையோடு நாந்தகமும் படர் தண்டும் ** ஒண் சார்ங்க வில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கு * என்று
இடையே * இராமானுச முனி ஆயின இந்நிலத்தே 33

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக் கலியை * நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் * பிறங்கியதில்லை ** என் பெய்வினை தென்
புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கிய பின் *
நலத்தைப் பொறுத்தது * இராமானுசன் தன் நயப் புகழே 34

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே * சில மானிடத்தைப்

[58] இன்று

புயலே எனக் * கவி போற்றி செய்யேன் ** பொன்னரங்கம் என்னில்
மயலே பெருகும் இராமானுசன் * மன்னு மாமலர்த் தாள்
அயரேன் * அருவினை என்னை எவ்வாறு இன்றடர்ப்பதுவே? 35

அடல் கொண்ட நேமியன் ஆருயிர் நாதன்[59] * அன்றாரணச் சொல்
கடல் கொண்ட ஒண்பொருள் கண்டளிப்ப ** பின்னும் காசினியோர்
இடரின் கண் வீழ்ந்திடத் தானும் அவ்வொண்பொருள் கொண்டு * அவர் பின்
படரும் குணன் * எம் இராமானுசன் தன் படி இதுவே 36

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம் *
குடி கொண்ட கோயில் இராமானுசன் குணம் கூறும் ** அன்பர்
கடிகொண்ட மாமலர்த் தாள் கலந்துள்ளம் கனியும் நல்லோர் *
அடி கண்டு கொண்டுகந்து * என்னையும் ஆளவர்க்கு ஆக்கினரே 37

ஆக்கி அடிமை நிலைப் பித்தனை என்னை இன்று * அவமே
போக்கிப் புறத்திட்டது * என்பொருளா முன்பு ** புண்ணியர் தம்
வாக்கில் பிரியா இராமானுச! * நின் அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால் * உரையாய் இந்த நுண்பொருளே 38

பொருளும் புதல்வரும் பூமியும் * பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டிளைக்கும் * நமக்கு நெஞ்சே! ** மற்றுளார் தரமோ
இருள் கொண்ட வெந்துயர் மாற்றித் தன்னீறில் பெரும் புகழே *
தெருளும் தெருள் தந்து * இராமானுசன் செய்யும் சேமங்களே 39

சேம நல் வீடும் பொருளும் தருமமும் * சீரிய நற்
காமமும் * என்றிவை நான்கென்பர் ** நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான் *
வாமனன் சீலன்[60] * இராமானுசன் இந்த மண் மிசையே 40

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் * காணகில்லா ** உலகோர்கள் எல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே *
நண்ணரு ஞானம் தலைக் கொண்டு * நாரணற்காயினரே 41

ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதல் அளற்றழுந்தி
மாயும் என் ஆவியை * வந்தெடுத்தான் இன்று ** மாமலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன் * அரங்கன் என்னும்
தூயவன் * தீதில் இராமானுசன் தொல்லருள் சுரந்தே 42

சுரக்கும் திருவும் உணர்வும் * சொலப்புகில் வாயமுதம்

[59] நாதன் என்று
[60] வாமனன் சீரை

பரக்கும் * இருவினை பற்றறவோடும் ** படியில் உள்ளீர்!
உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறும் உறுகலியைத் *
துரக்கும் பெருமை * இராமானுசன் என்று சொல்லுமினே 43

சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் * சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அற நெறி * யாவும் தெரிந்தவன் ** எண்ணரும் சீர்
நல்லார் பரவும் இராமானுசன் * திருநாமம் நம்பிக்
கல்லார் அகலிடத்தோர் * எது பேறென்று காமிப்பரே 44

பேறொன்று மற்றில்லை நின் சரண் அன்றி * அப்பேறு அளித்தற்கு
ஆறொன்றும் இல்லை * மற்றச்சரண் அன்றி ** என்று இப்பொருளைத்
தேறும் அவர்க்கும் எனக்கும் உனைத் தந்த செம்மை சொல்லால் *
கூறும் பரமன்று * இராமானுச! மெய்ம்மை கூறிடிலே 45

கூறும் சமயங்கள் ஆறும் குலைய * குவலயத்தே
மாறன் பணித்த * மறை உணர்ந்தோனை ** மதியிலியேன்
தேறும்படி என் மனம் புகுந்தானைத் * திசை அனைத்தும்
ஏறும் குணனை * இராமானுசனை இறைஞ்சினமே 46

இறைஞ்சப்படும் பரன் ஈசன் அரங்கன் என்று * இவ்வுலகத்து
அறம் செப்பும் * அண்ணல் இராமானுசன் ** என் அருவினையின்
திறம் செற்று இரவும் பகலும் விடாது என்தன் சிந்தை உள்ளே *
நிறைந்து ஒப்பற இருந்தான் * எனக்கு ஆரும் நிகரில்லையே 47

நிகரின்றி நின்ற என் நீசதைக்கு * நின்[61] அருளின் கணன்றிப்
புகல் ஒன்றும் இல்லை * அருட்கும் அஃதே புகல் ** புன்மையிலோர்
பகரும் பெருமை இராமானுச! * இனி நாம் பழுதே
அகலும் பொருள் என்? * பயன் இருவோமுக்குமான பின்னே 48

ஆனது செம்மை அற நெறி * பொய்ம்மை அறுசமயம்
போனது பொன்றி * இறந்தது வெங்கலி ** பூங்கமலத்
தேனதி பாய் வயல் தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத் *
தான் அதில் மன்னும் * இராமானுசன் இத்தலத்துதித்தே 49

உதிப்பன உத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக்
கொதித்திட * மாறி நடப்பன ** கொள்ளை வன் குற்றம் எல்லாம்
பதித்த என் புன்கவிப் பாவினம் பூண்டன பாவுதொல் சீர் *
எதித்தலை நாதன் * இராமானுசன் தன் இணை அடியே 50

அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கட்காய் * அன்று பாரதப் போர்
முடியப் * பரிநெடுந்தேர் விடும் கோனை ** முழுதுணர்ந்த

[61] உன்

அடியர்க்கமுதம் இராமானுசன் * என்னை ஆள வந்து இப்
படியில் பிறந்தது * மற்றில்லை காரணம் பார்த்திடிலே 51

பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப * இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ் கொண்டு * புன்மையினேன் இடைத் தான் புகுந்து **
தீர்த்தான் இருவினை தீர்த்து அரங்கன் செய்ய * தாளிணையோடு
ஆர்த்தான் * இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே 52

அற்புதன் செம்மை இராமானுசன் * என்னை ஆள வந்த
கற்பகம் * கற்றவர் காமுறு சீலன் ** கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும் பரனதென்னும் *
நற்பொருள் தன்னை * இந்நானிலத்தே வந்து நாட்டினனே 53

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது ** தென் குருகை வள்ளல்
வாட்டமிலா வண் தமிழ் மறை வாழ்ந்தது * மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து * இராமானுசன் தன் இயல்வு கண்டே 54

கண்டவர் சிந்தை கவரும் * கடிபொழில் தென்னரங்கன் *
தொண்டர் குலாவும் இராமானுசனைத் ** தொகையிறந்த
பண்தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும் *
கொண்டலை மேவித் தொழும் * குடியாம் எங்கள் கோக்குலமே[62] 55

கோக்குல மன்னரை மூவெழுகால் * ஒரு கூர் மழுவால்
போக்கிய தேவனைப் * போற்றும் புனிதன் ** புவனம் எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்த பின் * என்
வாக்குரையாது * என் மனம் நினையாது இனி மற்றொன்றையே 56

மற்றொரு பேறு மதியாது * அரங்கன் மலரடிக்கு ஆள்
உற்றவரே * தனக்குற்றவராய்க் கொள்ளும் உத்தமனை **
நற்றவர் போற்றும் இராமானுசனை * இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்ற பின் மற்றறியேன் ஒரு பேதைமையே 57

பேதையர் வேதப் பொருள் இதென்று உன்னிப் * பிரமம் நன்றென்று
ஓதி * மற்றெல்லா உயிரும் அஃதென்றே ** உயிர்கள் மெய் விட்டு
ஆதிப் பரனோடு ஒன்றாம் என்று சொல்லும் அவ்வல்லல் எல்லாம் *
வாதில் வென்றான் * எம் இராமானுசன் மெய்ம்மதிக் கடலே 58

கடல் அளவாய திசை எட்டினுள்ளும் * கலி இருளே
மிடை தரு காலத்து இராமானுசன் ** மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ்விருளைத் துரந்திலனேல் * உயிரை

[62] கோக்குடியே

உடையவன் * நாரணன் என்று அறிவார் இல்லை உற்றுணர்ந்தே 59

உணர்ந்த மெய்ஞ் ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்
மணம் தரும் * இன்னிசை மன்னும் இடந்தொறும் ** மாமலராள்
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதி தொறும் புக்கு நிற்கும் *
குணம் திகழ் கொண்டல் * இராமானுசன் எம் குலக் கொழுந்தே 60

கொழுந்து விட்டோடிப் படரும் வெங்கோள்வினையால் * நிரயத்து
அழுந்தியிட்டேனை * வந்தாட் கொண்ட பின்னும் ** அருமுனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமானுசன் * தொல் புகழ்[63] சுடர் மிக்
கெழுந்தது * அத்தால் நல்லதிசயம் கண்டது இருநிலமே 61

இருந்தேன் இருவினைப் பாசம் கழற்றி * இன்று யான் இறையும்
வருந்தேன் * இனி எம் இராமானுசன் ** மன்னு மாமலர்த் தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மை செய்யாப் *
பெருந்தேவரைப்[64] பரவும் * பெரியோர் தம் கழல் பிடித்தே 62

பிடியைத் தொடரும் களிறென்ன * யான் உன் பிறங்கிய சீர்
அடியைத் தொடரும்படி நல்க வேண்டும் ** அறுசமயச்
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து * இப்
படியைத் தொடரும் * இராமானுச! மிக்க பண்டிதனே! 63

பண்தரு மாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய் மதமாய்
விண்டிட * எங்கள் இராமானுச முனி வேழம் ** மெய்ம்மை
கொண்ட நல் வேதக் கொழுந்தண்டம் ஏந்திக் குவலயத்தே *
மண்டி வந்தேன்றது * வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே 64

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு * என்றும் மறையவர் தம்
தாழ்வற்றது * தவம் தாரணி பெற்றது ** தத்துவ நூல்
கூழற்றது குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு * அந்
நாழற்றது * நம் இராமானுசன் தந்த ஞானத்திலே 65

ஞானம் கனிந்த நலம் கொண்டு * நாள் தொறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் ** வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் * தன்னை எய்தினர்க்கு அத்
தானம் கொடுப்பது * தன் தகவென்னும் சரண் கொடுத்தே 66

சரணம் அடைந்த தருமனுக்கா * பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன் ** தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கன்றென்று இராமானுசன் * உயிர்கட்கு

[63] தன் புகழ்
[64] பெருந்தேவனைப்

அரண் அங்கமைத்திலனேல் * அரணார் மற்று இவ்வாருயிர்க்கே? 67

ஆர் எனக்கின்று நிகர் சொல்லில்? * மாயன் அன்று ஐவர் தெய்வத்
தேரினில் செப்பிய * கீதையின் செம்மைப் ** பொருள் தெரியப்
பாரினில் சொன்ன இராமானுசனைப் பணியும் நல்லோர் *
சீரினில் சென்று பணிந்தது * என் ஆவியும் சிந்தையுமே 68

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்தது கண்டு ** இவை என்தனக்கு அன்றருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன் * தானது தந்து *
எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே 69

என்னையும் பார்த்து என் இயல்வையும் பார்த்து * எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில் * அருள் செய்வதே நலம் ** அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலம் உளதே? * உன் பெருங் கருணை
தன்னை என் பார்ப்பர்? * இராமானுச! உன்னைச் சார்ந்தவரே 70

சார்ந்ததென் சிந்தை உன் தாளிணைக் கீழ் * அன்பு தான் மிகவும்
கூர்ந்தது * அத்தாமரைத் தாள்களுக்கு ** உன்தன் குணங்களுக்கே
தீர்ந்தது என் செய்கை முன் செய்வினை * நீ செய்வினை[65] அதனால்
பேர்ந்தது * வண்மை இராமானுச! எம் பெருந்தகையே! 71

கைத்தனன் தீய சமயக் கலகரைக் * காசினிக்கே
உய்த்தனன் * தூய மறை நெறி தன்னை ** என்றுன்னி உள்ளம்
நெய்த்தவன் போடிருந்தேத்தும் நிறை புகழோருடனே *
வைத்தனன் என்னை * இராமானுசன் மிக்க வண்மை செய்தே 72

வண்மையினாலும் தன் மாதகவாலும் * மதி புரையும்
தண்மையினாலும் * இத்தாரணியோர்கட்கு ** தான் சரணாய்
உண்மை நல் ஞானம் உரைத்த இராமானுசனை உன்னும் *
திண்மை அல்லால் எனக்கில்லை * மற்றோர் நிலை தேர்ந்திடிலே 73

தேரார் மறையின் திறம் என்று * மாயவன் தீயவரைக்
கூராழி கொண்டு குறைப்பது ** கொண்டல் அனைய வண்மை
ஏரார் குணத்து எம் இராமானுசன் * அவ்வெழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது * அப்போது ஒரு சிந்தை செய்தே 74

செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் * சங்கமும் ஏந்தி ** நங்கண் முகப்பே
மொய்த்தலைத்து[66] உன்னை விடேன் என்றிருக்கிலும் நின் புகழே *

[65] செய்வன
[66] மெய்த்தலத்து

மொய்த்தலைக்கும் வந்து * இராமானுச! என்னை முற்றும் நின்றே 75

* நின்றவண் கீர்த்தியும் நீள் புனலும் * நிறை வேங்கடப் பொற்
குன்றமும் * வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும் **
உன்தனக்கு எத்தனை இன்பம் தரும் உன் இணை மலர்த் தாள் *
என்தனக்கும் அது * இராமானுச! இவை ஈந்தருளே 76

ஈந்தனன் ஈயாத இன்னருள் * எண்ணில் மறைக் குறும்பைப்
பாய்ந்தனன் * அம்மறைப் பல்பொருளால் ** இப்படி அனைத்தும்
ஏய்ந்தனன்[67] கீர்த்தியினால் என் வினைகளை * வேர் பறியக்
காய்ந்தனன் * வண்மை இராமானுசற்கு என் கருத்தினியே? 77

கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி * கருதரிய
வருத்தத்தினால் * மிக வஞ்சித்து ** நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கிய பின் * என் நெஞ்சில்
பொருத்தப் படாது * எம் இராமானுச! மற்றோர் பொய்ப் பொருளே 78

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து * இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும் * இராமானுசன் நிற்க ** வேறு நம்மை
உய்யக் கொள்ள வல்ல தெய்வம் இங்கு யாதென்று உலர்ந்தவமே *
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே 79

நல்லார் பரவும் இராமானுசன் * திரு நாமம் நம்ப
வல்லார் திறத்தை * மறவாதவர்கள்[68] எவர் ** அவர்க்கே
எல்லா இடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தெழும்பும் *
சொல்லால் மனத்தால் * கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே 80

சோர்வின்றி உன்தன் துணை அடிக் கீழ் * தொண்டு பட்டவர் பால்
சார்வின்றி நின்ற எனக்கு ** அரங்கன் செய்ய தாளிணைகள்
பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச! * இனி உன்
சீர் ஒன்றிய கருணைக்கு * இல்லை மாறு தெரிவுறிலே 81

தெரிவுற்ற ஞாலம் செறியப் பெறாது * வெந்தீ வினையால்
உருவற்ற ஞானத்து[69] உழல்கின்ற என்னை ** ஒரு பொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான் என்ன புண்ணியனோ? *
தெரிவுற்ற கீர்த்தி * இராமானுசன் என்னும் சீர் முகிலே 82

சீர் கொண்டு பேரறம் செய்து * நல்வீடு செறிதும்[70] என்னும்

---

[67] ஏய்ந்த வண்
[68] மதியாதவர்கள்
[69] ஞாலத்து
[70] பெறுதும்

பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன் ** உன் பத யுகமாம்
ஏர் கொண்ட வீட்டை[71] எளிதினில் எய்துவன் * உன்னுடைய
கார் கொண்ட வண்மை * இராமானுச! இது கண்டு கொள்ளே 83

கண்டு கொண்டேன் எம் இராமானுசன் தன்னை * காண்டலுமே
தொண்டு கொண்டேன் அவன் தொண்டர் பொற்றாளில் ** என்
தொல்லை வெந்நோய்
விண்டு கொண்டேன் அவன் சீர் வெள்ளவாரியை * வாய்மடுத்து இன்று
உண்டு கொண்டேன் * இன்னம் உற்றனவோதில் உலப்பில்லையே 84

ஓதிய வேதத்தின் உட்பொருளாய் * அதன் உச்சி மிக்க
சோதியை * நாதன் என அறியாது உழல்கின்ற தொண்டர் **
பேதைமை தீர்த்த[72] இராமானுசனைத் தொழும் பெரியோர் *
பாதம் அல்லால் என்தன் ஆருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே 85

பற்றா மனிசரைப் பற்றி * அப்பற்று விடாதவரே
உற்றார் என உழன்று * ஓடி நையேன் இனி ** ஒள்ளிய நூல்
கற்றார் பரவும் இராமானுசனைக் * கருதும் உள்ளம்
பெற்றார் யவர் * அவர் எம்மை நின்றாளும் பெரியவரே 86

பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும் * தன் குணங்கட்கு
உரிய சொல் என்றும் * உடையவன் என்றென்று ** உணர்வின் மிக்கோர்
தெரியும் வண்கீர்த்தி இராமானுசன் * மறை தேர்ந்துலகில்
புரியு நல் ஞானம் * பொருந்தாதவரைப் பொரும் கலியே 87

கலி மிக்க செந்நெல் கழனிக் குறையல் * கலைப் பெருமான்
ஒலி மிக்க பாடலை உண்டு * தன் உள்ளம் தடித்து ** அதனால்
வலி மிக்க சீயம் இராமானுசன் * மறை வாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே 88

போற்றரும் சீலத்து இராமானுச! * நின் புகழ் தெரிந்து
சாற்றுவனேல் * அது தாழ்வு அது தீரில் * உன் சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் * என் மனம் ஏத்தி அன்றி
ஆற்றகில்லாது * இதற்கென் நினைவாய் என்றிட்டஞ்சுவனே 89

நினையார்[73] பிறவியை நீக்கும் பிரானை * இந்நீள் நிலத்தே
எனையாள வந்த இராமானுசனை ** இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் * பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே 90

---
[71] வீட்டில்
[72] தீர்க்கும்
[73] நினைவார்

மருள் சுரந்து ஆகம வாதியர் கூறும் * அவப்[74] பொருளாம்
இருள் சுரந்து[75] எய்த்த * உலகிருள் நீங்க ** தன் ஈண்டிய சீர்
அருள் சுரந்து எல்லா உயிர்கட்கும் நாதன் * அரங்கன் என்னும்
பொருள் சுரந்தான் * எம் இராமானுசன் மிக்க[76] புண்ணியனே 91

புண்ணிய நோன்பு புரிந்துமிலேன் * அடி போற்றி செய்யும்
நுண்ணரும் கேள்வி நுவன்றுமிலேன் ** செம்மை நூற்புலவர்க்கு
எண்ணரும் கீர்த்தி இராமானுச! * இன்று நீ புகுந்து என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்ற இக்காரணம் கட்டுரையே 92

கட்டப் பொருளை மறைப் பொருள் என்று * கயவர் சொல்லும்
பெட்டைக் கெடுக்கும் பிரான் அல்லனே? ** என் பெரு வினையைக்
கிட்டிக் கிழங்கொடு தன் அருள் என்னும் ஒள்வாள் உருவி *
வெட்டிக் களைந்த * இராமானுசன் என்னும் மெய்த்தவனே 93

தவம் தரும் செல்வம்[77] தகவும் தரும் * சலியாப்[78] பிறவிப்
பவம் தரும் * தீவினை பாற்றித் தரும் ** பரந்தாமம் என்னும்
திவம் தரும் தீதில் இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு *
உவந்தருந்தேன் * அவன் சீர் அன்றி யான் ஒன்றும் உள்மகிழ்ந்தே 94

உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து * அவர்க்கு உயவே
பண்ணும் பரனும் * பரிவிலனாம்படி ** பல்லுயிர்க்கும்
விண்ணின் தலை நின்று வீடளிப்பான் எம் இராமானுசன் *
மண்ணின் தலத்துதித்து * மறை[79] நாலும் வளர்த்தனனே 95

வளரும் பிணி கொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது ** முடைத்தலையூன்
தளரும் அளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு *
உளர் எம் இறைவர் * இராமானுசன் தன்னை உற்றவரே 96

தன்னை உற்றாட் செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத் தாள்
தன்னை உற்றாட் செய்ய * என்னை உற்றான் இன்று ** தன் தகவால்
தன்னை உற்றார் அன்றித் தன்மை உற்றார் இல்லை என்றறிந்து *
தன்னை உற்றாரை * இராமானுசன் குணம் சாற்றிடுமே 97

***** இடுமே இனிய சுவர்க்கத்தில் * இன்னும் நரகில் இட்டுச்

---

[74] மறப்
[75] சுமந்து
[76] என்னும்
[77] செல்வும்
[78] சரியாப்
[79] உய்மறை

சுடுமே? * அவற்றைத் தொடர் தரு தொல்லை ** சுழல் பிறப்பில்
நடுமே? இனி நம் இராமானுசன் * நம்மை நம் வசத்தே
விடுமே? சரணம் என்றால் * மனமே! நையல் மேவுதற்கே 98

தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் * தாழ் சடையோன்
சொற்கற்ற சோம்பரும் * சூனிய வாதரும் ** நான்மறையும்
நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே *
பொற் கற்பகம் * எம் இராமானுச முனி போந்த பின்னே 99

போந்ததென் நெஞ்சென்னும் பொன் வண்டு * உனதடிப் போதில் ஒண்சீ
ராம் தெளி தேன் உண்டு * அமர்ந்திட வேண்டி ** நின் பால் அதுவே
ஈந்திட வேண்டும் இராமானுச! * இது அன்றி ஒன்றும்
மாந்தகில்லாது * இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே 100

மயக்கும் இருவினை வல்லியில்[80] பூண்டு * மதி மயங்கித்
துயக்கும் பிறவியில் * தோன்றிய என்னைத் ** துயர் அகற்றி
உயக் கொண்டு நல்கும் இராமானுச! * என்றதுன்னை உன்னி
நயக்கும் அவர்க்கு இது இழுக்கென்பர் * நல்லவர் என்றும் நைந்தே 101

நையும் மனம் உன் குணங்களை உன்னி * என் நா இருந்து எம்
ஐயன் * இராமானுசன் என்றழைக்கும் ** அருவினையேன்
கையும் தொழும் கண் கருதிடும் காணக் கடல் புடை சூழ் *
வையம் இதனில் * உன் வண்மை என் பால் என் வளர்ந்ததுவே? 102

வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாய் * அன்று வாள் அவுணன்
கிளர்ந்த * பொன் ஆகம் கிழித்தவன் ** கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமானுசன் * என்தன் மெய்வினை நோய்
களைந்து நன் ஞானம் அளித்தனன் * கையில் கனி என்னலே 103

கையில் கனி என்னக் கண்ணனைக் காட்டித் தரிலும் * உன்தன்
மெய்யில் பிறங்கிய * சீர் அன்றி வேண்டிலன் யான் ** நிரயத்
தொய்யில் கிடக்கிலும்[81] சோதி விண் சேரிலும்[82] இவ்வருள் நீ *
செய்யில் தரிப்பன் * இராமானுச! என் செழுங் கொண்டலே! 104

***** செழுந்திரைப் பாற்கடல் * கண்துயில் மாயன் * திருவடிக் கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் * மேவு நன் ஞானி ** நல் வேதியர்கள்
தொழும் திருப்பாதன் இராமானுசனைத் தொழும் பெரியோர் *
எழுந்திரைத்தாடும் இடம் * அடியேனுக்கு இருப்பிடமே 105

---

[80] வல்லியை
[81] கிடக்கிலென்
[82] சேரிலென்

* இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் * மாயனுக்கென்பர் நல்லோர் ** அவை தம்மொடும்[83] வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து * இன்றவன் வந்து
இருப்பிடம் * என்தன் இதயத்துள்ளே தனக்கின்புறவே 106

* இன்புற்ற சீலத்து இராமானுச! * என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் * உடல் தோறும் பிறந்திறந்து ** எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு * உன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னை ஆக்கி அங்காட்படுத்தே 107

* அங்கயல் பாய் வயல் தென்னரங்கன் * அணியாக மன்னும்
பங்கய மாமலர்ப் * பாவையைப் போற்றுதும் ** பத்தி எல்லாம்
தங்கியதென்னத்தழைத்து நெஞ்சே! நம் தலை மிசையே *
பொங்கிய கீர்த்தி * இராமானுசன் அடிப் பூ மன்னவே 108

---

**மணவாள மாமுனிகள் அருளிச் செய்த**

## உபதேச ரத்தினமாலை

### உபதேச ரத்தினமாலை தனியன்

### கோயில் கந்தாடை அண்ணன் அருளிச் செய்தது

முன்னம் திருவாய்மொழிப் பிள்ளை தாம் உபதேசித்த * நேர்
தன்னின் படியைத் தணவாத சொல் மணவாள முனி *
தன் அன்புடன் செய் உபதேச ரத்தினமாலை தன்னை *
தன் நெஞ்சு தன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே

**மணவாள மாமுனிகள் அருளிச் செய்த**

## உபதேச ரத்தினமாலை

* எந்தை திருவாய்மொழிப் பிள்ளை இன்னருளால் *
வந்த உபதேச மார்க்கத்தைச் - சிந்தை செய்து **
பின்னவரும் கற்க * உபதேசமாய்ப் பேசுகின்றேன் *
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து 1

கற்றோர்கள் தாம் உகப்பர் * கல்வி தன்னில் ஆசை உள்ளோர் *
பெற்றோம் என உகந்து பின்பு கற்பர் ** - மற்றோர்கள்

[83] தன்னொடும்

மாச்சரியத்தால் * இகழில் வந்ததென் நெஞ்சே! * இகழ்கை
ஆச்சரியமோ தான் அவர்க்கு 2

* ஆழ்வார்கள் வாழி * அருளிச் செயல் வாழி *
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி ** - ஏழ் பாரும்
உய்ய * அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி *
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து 3

பொய்கையார் பூதத்தார் பேயார் * புகழ் மழிசை
ஐயன் * அருள் மாறன் சேரலர் கோன் ** - துய்ய பட்ட
நாதன் அன்பர் தாள் தூளி * நற்பாணன் நற்கலியன் *
ஈதிவர் தோற்றத்து அடைவாம் இங்கு 4

அந்தமிழால் நற்கலைகள் * ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் *
இந்த உலகில் இருள் நீங்க ** - வந்துதித்த
மாதங்கள் நாள்கள் தம்மை * மண்ணுலகோர் தாம் அறிய *
ஈதென்று சொல்லுவோம் யாம் 5

* ஐப்பசியில் ஓணம் * அவிட்டம் சதயம் இவை *
ஒப்பிலவா நாள்கள் உலகத்தீர்! ** - எப்புவியும்
பேசு புகழ் * பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார் *
தேசுடனே தோன்று சிறப்பால் 6

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு * முன்னே வந்துதித்து *
நற்றமிழால் நூல் செய்து நாட்டை உய்த்த ** - பெற்றிமையோ
ரென்று * முதல் ஆழ்வார்கள் என்னும் பெயர் இவர்க்கு *
நின்றதுலகத்தே நிகழ்ந்து 7

பேதை நெஞ்சே! * இன்றைப் பெருமை அறிந்திலையோ *
ஏது பெருமை இன்றைக்கு என்றென்னில் ** - ஓதுகின்றேன்
வாய்த்த புகழ் மங்கையர் கோன் * மாநிலத்தில் வந்துதித்த *
கார்த்திகையில் கார்த்திகை நாள் காண் 8

* மாறன் பணித்த * தமிழ் மறைக்கு * மங்கையர் கோன்
ஆறங்கம் கூற அவதரித்த ** - வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள் * இன்றென்று[84] காதலிப்பார் *
வாய்த்த மலர்த் தாள்கள் நெஞ்சே! வாழ்த்து 9

கார்த்திகையில் உரோகிணி நாள் * காண்மின் இன்று காசினியீர்! *
வாய்த்த புகழ்ப் பாணர் வந்துதிப்பால் ** - ஆத்தியர்கள்

[84] என்றென்று

அன்புடனே தான் * அமலனாதி பிரான் கற்றதற் பின் *
நன்குடனே கொண்டாடும் நாள் 10

மன்னிய சீர் மார்கழியில் * கேட்டை இன்று மாநிலத்தீர்! *
என்னிதனுக்கு ஏற்றம் எனில் உரைக்கேன் ** - துன்னு புகழ்
மாமறையோன் * தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறப்பால் *
நான்மறையோர் கொண்டாடும் நாள் 11

தையில் மகம் இன்று * தாரணியீர்! ஏற்றம் * இந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் ** - துய்ய மதி
பெற்ற * மழிசைப் பிரான் பிறந்த நாள் என்று *
நற்றவர்கள் கொண்டாடும் நாள் 12

மாசிப் புனர்பூசம் * காண்மின் இன்று மண்ணுலகீர்! *
தேசு இத்திவசத்துக்கு ஏதென்னில் ** - பேசுகின்றேன்
கொல்லி நகர் கோன் * குலசேகரன் பிறப்பால் *
நல்லவர்கள் கொண்டாடும் நாள் 13

* ஏரார் வைகாசி * விசாகத்தின் ஏற்றத்தை *
பாரோர் அறியப் பகர்கின்றேன் ** - சீராரும்
வேதம் தமிழ் செய்த * மெய்யன் எழில் குருகை *
நாதன் அவதரித்த நாள் 14

* உண்டோ வைகாசி * விசாகத்துக்கு ஒப்பொரு நாள்? *
உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர்? ** - உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு * தென் குருகைக்கு உண்டோ *
ஒரு பார் தனில் ஒக்கும் ஊர் 15

இன்றைப் பெருமை அறிந்திலையோ * ஏழை நெஞ்சே ! *
இன்றைக்கு என் ஏற்றம் எனில் உரைக்கேன் ** - நன்றி புனை
பல்லாண்டு பாடிய * நம் பட்டர் பிரான் வந்துதித்த *
நல்லானியிற் சோதி நாள் 16

மாநிலத்தில் முன் நம் * பெரியாழ்வார் வந்துதித்த *
ஆனி தன்னில் சோதி என்றால் ஆதரிக்கும் ** - ஞானியர்க்கு
ஒப்போர் இலை * இவ்வுலகு தனில் என்று நெஞ்சே! *
எப்போதும் சிந்தித்திரு 17

மங்களாசாசனத்தில் * மற்றுள்ள ஆழ்வார்கள் *
தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றி ** - பொங்கும்
பரிவாலே * வில்லிபுத்தூர்ப் பட்டர் பிரான் பெற்றான் *
பெரியாழ்வர் என்னும் பெயர் 18

கோதிலவாம் ஆழ்வார்கள் * கூறு கலைக்கெல்லாம் *
ஆதி திருப்பல்லாண்டு ஆனதுவும் ** - வேதத்துக்கு
ஓம் என்னும் அது போல் * உள்ளதுக்கெல்லாம் சுருக்காய் *
தான் மங்கலம் ஆதலால் 19

* உண்டோ திருப்பல்லாண்டுக்கு * ஒப்பதோர் கலை தான்? *
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர்? ** - தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் * அவர் செய் கலையில் *
பைதல் நெஞ்சே! நீ உணர்ந்து பார் 20

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் * மதுரகவி
ஆழ்வார் * எதிராசராம் இவர்கள் ** - வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மின் * வாசியையும் *
இந்த உலகோர்க்கு உரைப்போம் யாம் 21

* இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
வன்றோ * இங்காண்டாள் அவதரித்தாள் ** - குன்றாத
வாழ்வான * வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து *
ஆழ்வார் திரூமகளாராய் 22

பெரியாழ்வார் பெண் பிள்ளையாய் * ஆண்டாள் பிறந்த *
திருவாடிப்பூரத்தின் சீர்மை ** - ஒரு நாளைக்
குண்டோ * மனமே! உணர்ந்து பார் * ஆண்டாளுக்
குண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு 23

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் * ஆழ்வார்கள்
தம் செயலை * விஞ்சி நிற்கும் தன்மையளாய் ** - பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் * பத்தியுடன் நாளும் *
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து 24

* ஏரார் மதுரகவி * இவ்வுலகில் வந்துதித்த *
சீராரும் சித்திரையில் சித்திரை நாள் ** - பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் * வந்துதித்த நாள்களிலும் *
உற்றதெமக்கென்று நெஞ்சே ஓர் 25

* வாய்த்த திருமந்திரத்தின் * மத்திமமாம் பதம் போல் *
சீர்த்த மதுரகவி செய் கலையை ** - ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் * அருளிச் செயல் நடுவே *
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து 26

* இன்றுலகீர்! சித்திரையில் * ஏய்ந்த திருவாதிரை நாள் *

என்றையினும் இன்றி இதனுக்கு ஏற்றம் என் தான் ** - என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் * எதிராசர் தம் பிறப்பால் *
நாற்றிசையும் கொண்டாடும் நாள் 27

* ஆழ்வார்கள் தாங்கள் * அவதரித்த நாள்களிலும் *
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! ** - ஏழ் பாரும்
உய்ய * எதிராசர் உதித்தருளும் * சித்திரையில்
செய்ய திருவாதிரை 28

* எந்தை எதிராசர் * இவ்வுலகில் எந்தமக்கா *
வந்துதித்த நாள் என்னும் வாசியினால் ** - இந்தத்
திருவாதிரை தன்னின் * சீர்மை தனை நெஞ்சே! *
ஒருவாமல் எப்பொழுதும் ஓர் 29

எண்ணரும் சீர்ப் பொய்கை முன்னோர் * இவ்வுலகில் தோன்றிய ஊர் *
வண்மை மிகு கச்சி மல்லை மாமயிலை ** - மண்ணியில் நீர்
தேங்கும் குறையலூர் * சீர்க் கலியன் தோன்றிய ஊர் *
ஓங்கும் உறையூர் பாணன் ஊர் 30

தொண்டரடிப்பொடியார் தோன்றிய ஊர் * தொல் புகழ் சேர்
மண்டங்குடி என்பர் மண்ணுலகில் ** - எண்டிசையும்
ஏத்தும் * குலசேகரன் ஊர் என உரைப்பர் *
வாய்த்த திருவஞ்சிக்களம் 31

மன்னு திருமழிசை * மாடத் திருக்குருகூர் *
மின்னு புகழ் வில்லிபுத்தூர் மேதினியில் ** - நன்னெறியோர்
ஏய்ந்த பத்திசாரர் * எழில் மாறன் பட்டர் பிரான் *
வாய்ந்துதித்த ஊர்கள் வகை 32

சீராரும் வில்லிபுத்தூர் * செல்வத் திருக்கோளூர் *
ஏரார் பெரும்பூதூர் என்னும் இவை ** - பாரில்
மதியாரும் ஆண்டாள் * மதுரகவி ஆழ்வார் *
எதிராசர் தோன்றிய ஊர் இங்கு 33

ஆழ்வார்கள் ஏற்றம் * அருளிச் செயல் ஏற்றம் *
தாழ்வாதும் இன்றி அவை தாம் வளர்த்தோர் ** - ஏழ் பாரும்
உய்ய * அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம் *
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து 34

ஆழ்வார்களையும் * அருளிச் செயல்களையும் *
தாழ்வா நினைப்பவர்கள் தாம் ** நரகில் - வீழ்வார்கள்
என்று நினைத்து நெஞ்சே! * எப்பொழுதும் நீ அவர் பால் *

சென்றணுகக் கூசித் திரி 35

தெருளுற்ற ஆழ்வார்கள் * சீர்மை அறிவாரார் *
அருளிச் செயலை அறிவாரார் ** - அருள் பெற்ற
நாதமுனி முதலாம்[85] * நம் தேசிகரை அல்லால் *
பேதை மனமே! உண்டோ பேசு 36

ஓராண் வழியாய் * உபதேசித்தார் முன்னோர் *
ஏரார் எதிராசர் இன்னருளால் ** - பாருலகில்
ஆசை உடையோர்க்கெல்லாம் * ஆரியர்காள்! கூறும் என்று *
பேசி வரம்பறுத்தார் பின் 37

* எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு *
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் ** - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை * எம்பெருமானார் வளர்த்த *
அந்தச் செயல்[86] அறிகைக்கா 38

பிள்ளான் நஞ்சீயர் * பெரியவாச்சான் பிள்ளை *
தெள்ளார் வடக்குத் திருவீதிப் - பிள்ளை **
மணவாள யோகி * திருவாய்மொழியைக் காத்த *
குணவாளர் என்று நெஞ்சே! கூறு 39

முந்துறவே பிள்ளான் * முதலானோர் செய்தருளும் *
அந்த வியாக்கியைகள் அன்றாகில் ** - அந்தோ
திருவாய்மொழிப் பொருளை * தேர்ந்துரைக்க வல்ல
குருவார் * இக்காலம் நெஞ்சே! கூறு 40

தெள்ளாரும் ஞானத் * திருக்குருகைப் பிரான்
பிள்ளான் * எதிராசர் பேரருளால் ** - உள்ளாரும்
அன்புடனே * மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது *
இன்ப மிகு ஆறாயிரம் 41

தன் சீரை ஞானியர்கள்[87] * தாம் புகழும் வேதாந்தி *
நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் ** - எஞ்சாத
ஆர்வமுடன் * மாறன் மறைப் பொருளை ஆய்ந்துரைத்தது *
ஏர் ஒன்பதினாயிரம் 42

நம்பிள்ளை தம்முடைய * நல்லருளால் ஏவியிட *
பின் பெரியவாச்சான் பிள்ளை அதனால் ** - இன்பா

[85] முதலான
[86] செயலை
[87] ஞானியர்

வருபத்தி * மாறன் மறைப் பொருளைச் சொன்னது *
இருபத்து நாலாயிரம் 43

* தெள்ளியதா நம்பிள்ளை * செப்பு நெறி தன்னை *
வள்ளல் வடக்குத் திருவீதிப் - பிள்ளை ** இந்த
நாடறிய * மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது *
ஈடு முப்பத்தாறாயிரம் 44

அன்போடு * அழகிய மணவாளச் சீயர் *
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா ** - தம் பெரிய
போதமுடன் * மாறன் மறையின் பொருள் உரைத்தது *
ஏதமில் பன்னீராயிரம் 45

பெரிவாச்சான் பிள்ளை * பின்புள்ளவைக்கும்
தெரிய * வியாக்கியைகள் செய்வால் ** - அரிய
அருளிச் செயல் பொருளை * ஆரியர்கட்கு இப்போது *
அருளிச் செயலாய்த் தறிந்து 46

நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் * நாலிரண்டுக்கு *
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே ** - தம் சீரால்
வைய குருவின் தம்பி * மன்னு மணவாள முனி *
செய்யுமவை தாமும் சில 47

சீரார் வடக்குத் திருவீதிப் பிள்ளை * எழு
தேரார் தமிழ் வேதத்து ஈடு தனைத் ** - தாரும் என
வாங்கி முன் நம்பிள்ளை * ஈயுண்ணி மாதவர்க்குத்
தாம் கொடுத்தார் * பின் அதனைத் தான் 48

ஆங்கவர் பால் பெற்ற * சிறியாழ்வானப் பிள்ளை *
தாம் கொடுத்தார் தம் மகனார் தம் கையில் ** - பாங்குடனே
நாலூர் பிள்ளைக்கு அவர் தாம் * நல்ல மகனார்க்கு அவர் தாம் *
மேலோர்க்கு ஈந்தார் அவரே மிக்கு 49

* நம்பெருமாள் நம்மாழ்வார் * நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் * அவரவர் தம் ஏற்றத்தால் ** - அன்புடையோர்
சாற்று[88] திருநாமங்கள் * தான் என்று நன்னெஞ்சே! *
ஏத்ததனைச் சொல்லி[89] நீ இன்று 50

துன்னு புகழ்க் கந்தாடைத் * தோழப்பர் தம் உகப்பால் *

[88] சாத்து
[89] சொல்லு

என்ன உலகாரியனோ என்றுரைக்க ** - பின்னை
உலகாரியன் என்னும் பேர் * நம்பிள்ளைக்கு ஓங்கி *
விலகாமல் நின்றதென்றும் மேல் 51

பின்னை வடக்குத் திருவீதிப் பிள்ளை * அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து ** - மன்னு புகழ்
மைந்தர்க்குச் சாற்றுகையால்[90] * வந்து பரந்தது * எங்கும்
இந்தத் திருநாமம் இங்கு 52

***** அன்ன புகழ் முடும்பை * அண்ணல் உலகாசிரியன் *
இன்னருளால் செய்த கலை யாவையிலும் ** - உன்னில்
திகழ் வசன பூடணத்தின் சீர்மை * ஒன்றுக்கில்லை *
புகழல்ல இவ்வார்த்தை மெய் இப்போது 53

முன்னம் குரவோர் * மொழிந்த வசனங்கள்
தன்னை * மிகக் கொண்டு கற்றோர் தம் உயிர்க்கு ** - மின்னணியாச்
சேரச் சமைத்தவரே * சீர் வசன பூடணம் என்னும்[91]
பேர் * இக்கலைக்கு இட்டார் பின் 54

ஆர் வசன பூடணத்தின் * ஆழ்பொருள் எல்லாம் அறிவார் *
ஆரது சொல் நேரில் அனுட்டிப்பார் ** - ஓர் ஒருவர்
உண்டாகில் * அத்தனை காண் உள்ளமே * எல்லார்க்கும்
அண்டாததன்றோ அது 55

உய்ய நினைவுடையீர்! * உங்களுக்குச் சொல்லுகின்றேன் *
வைய குரு முன்னம் வாய் மொழிந்த ** - செய்ய கலை
யாம் * வசன பூடணத்தின் ஆழ்பொருளை * கற்றதனுக்
காம் நிலையில் நில்லும் அறிந்து 56

தேசிகர் பால் கேட்ட * செழும் பொருளைச் * சிந்தை தன்னில்
மாசறவே ஊன்ற மனனம் செய்து ** - ஆசரிக்க
வல்லார்கள் தாம் * வசன பூடணத்தின் வான் பொருளை *
கல்லாததென்னோ கவர்ந்து 57

சச்சம்பிரதாயம் * தாம் உடையோர் கேட்டக்கால் *
மெச்சும் வியாக்கியை[92] தான் உண்டாகில் ** - நச்சி
அதிகரியும் நீர் * வசன பூடணத்துக்கற்ற
மதியுடையீர்! * மத்தியத்தராய் 58

---

[90] சாத்துகையால்
[91] என்
[92] வியாக்கியைகள்

சீர் வசன பூடணத்தின் * செம்பொருளை * சிந்தை தன்னால்
தேரிலுமாம் * வாய் கொண்டு செப்பிலுமாம் ** - ஆரியர்காள்!
என்தனக்கு * நாளும் இனிதாக நின்றதையோ *
உன்தமக்கு எவ்வின்பம் உளதாம் 59

தன் குருவின் தாளிணைகள் தன்னில் * அன்பு ஒன்றில்லாதார் *
அன்பு தன் பால் செய்தாலும் அம்புயைகோன் ** - இன்ப மிகு
விண்ணாடு * தான் அளிக்க வேண்டியிரான் * ஆதலால்
நண்ணார் அவர்கள் திருநாடு 60

* ஞானம் அனுட்டானம் இவை * நன்றாகவே உடைய
னான * குருவை அடைந்தக்கால் ** - மாநிலத்தீர்!
தேனார் கமலத் * திருமாமகள் கொழுனன் *
தானே வைகுந்தம் தரும் 61

உய்ய நினைவுண்டாகில் * உம் குருக்கள் தம் பதத்தே
வையும் * அன்பு தன்னை இந்த மாநிலத்தீர்! ** - மெய் உரைக்கேன்
பையரவில் மாயன் * பரம பதம் உங்களுக்காம் *
கை இலங்கு நெல்லிக் கனி 62

ஆசாரியன் செய்த * உபகாரம் ஆனவது *
தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்றுமேல் ** - தேசாந்
தரத்தில் இருக்க * மனம் தான் பொருந்த மாட்டாது *
இருத்தல் இனியேதறியோம்[93] யாம் 63

தன் ஆரியனுக்குத் * தான் அடிமை செய்வது * அவன்
இந்நாடு தன்னில் இருக்கும் நாள் ** - அந்நேர்
அறிந்தும் அதில் ஆசை இன்றி * ஆசாரியனைப்
பிரிந்திருப்பார் ஆர் * மனமே! பேசு 64

ஆசாரியன் * சிச்சன் ஆருயிரைப் பேணுமவன் *
தேசாரும் சிச்சனவன் சீர் வடிவை ** - ஆசையுடன்
நோக்குமவன் என்னும் * நுண்ணறிவைக் கேட்டு வைத்தும் *
ஆர்க்கும் அந்நேர் நிற்கை அரிதாம் 65

பின்பழகராம் பெருமாள் சீயர் * பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்க ஆசையினால் ** - நம்பிள்ளைக்
கான அடிமைகள் செய் * அந்நிலையை நன்னெஞ்சே! *
ஊனமற எப்பொழுதும் ஓர் 66

ஆசாரியர்கள் * அனைவரும் முன் ஆசரித்த *

[93] இனியே தரியோம்

ஆசாரந்தன்னை அறியாதார் ** - பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு * மருளாதே * பூருவர்கள்
சீர்த்த நிலை தன்னை நெஞ்சே! சேர் 67

நாத்திகரும் நற்கலையின் * நன்னெறி சேர் ஆத்திகரும் *
ஆத்திக நாத்திகருமாம் இவரை ** - ஓர்த்து நெஞ்சே!
முன்னவரும் பின்னவரும் * மூர்க்கர் என விட்டு * நடுச்
சொன்னவரை நாளும் தொடர் 68

நல்ல மணம் உள்ளதொன்றை * நண்ணி இருப்பதற்கு *
நல்ல மணம் உண்டாம் நயமது[94] போல் ** - நல்ல
குணம் உடையோர் தங்களுடன் * கூடி இருப்பார்க்கு *
குணம் அதுவேயாம் சேர்த்தி கொண்டு 69

தீய கந்தம் உள்ளதொன்றைச் * சேர்ந்து இருப்பதொன்றுக்கு *
தீய கந்தமேறும் திறமது போல் ** - தீய
குணம் உடையோர் தங்களுடன் * கூடி இருப்பார்க்கு *
குணம் அதுவேயாம் செறிவு கொண்டு 70

முன்னோர் மொழிந்த * முறை தப்பாமல் கேட்டு *
பின்னோர்ந்து தாம் அதனைப் பேசாதே ** - தம் நெஞ்சில்
தோற்றினதே சொல்லி * இது சுத்த உபதேசவர
வாற்றதென்பர் * மூர்க்கராவார் 71

* பூருவாசாரியர்கள் * போதம் அனுட்டானங்கள் *
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் - தேறி **
இருள் தருமா ஞாலத்தே * இன்பம் உற்று வாழும் *
தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து 72

* இந்த உபதேச * ரத்தின மாலை தன்னைச் *
சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார் ** - எந்தை
எதிராசர் * இன்னருளுக்கு என்றும் இலக்காகி *
சதிராக வாழ்ந்திடுவார் தாம் 73

**எறும்பியப்பா அருளிச் செய்தது**

மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன் *
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை * - உன்னிச்
சிரத்தாலே தீண்டில் * அமானவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன் 74

---

[94] நலமது

# சாற்றுமுறை

## பெரியாழ்வார் அருளிச் செய்தது

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா! * உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு *
படை போர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

## பெரிய ஜீயர் அருளிச் செய்தது

ஸர்வதே$_3$ச த$_3$ஸாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா |
ராமானுஜார்ய தி$_3$வ்யாஞ்ஞா வர்த$_4$தாம் அபி$_4$வர்த$_4$தாம் |

## கந்தாடையண்ணன் அருளிச் செய்தது

ராமானுஜார்ய தி$_3$வ்யாஞ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்வலா |
தி$_3$க$_3$ந்தவ்யாபிநீ பூ$_4$யாத் ஸா ஹி லோக ஹிதைஷிணீ ||

## உடையவர் அருளிச் செய்தது

ஸ்ரீமந்! ஸ்ரீரங்க$_3$ ச்ரியம் அனுபத்$_3$ரவாம் அனுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய |
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க$_3$ ச்ரியம் அனுபத்$_3$ரவாம் அனுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ||

## பெரிய ஜீயர் அருளிச் செய்தது

நம: ஸ்ரீஷைல நாத$_2$ாய குந்தீ நக$_3$ர ஜன்மநே |
ப்ரஸாத$_3$லப்த$_4$ பரம ப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே ||

## நம்பெருமாள் அருளிச் செய்தது

ஸ்ரீஷைலேஷ த$_3$யாபாத்ரம் தீ$_3$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்ய ஜாமாதரம் முநிம் ||

## மடத்துப் பிள்ளை அருளிச் செய்தது

வாழி திருவாய்மொழிப் பிள்ளை * மாதகவால்
வாழும் மணவாள மாமுனிவன் * - வாழியவன்

மாறன் திருவாய்மொழிப் பொருளை * மாநிலத்தோர்
தேறும்படி உரைக்கும் சீர்

**ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்தது**

செய்ய தாமரைத் தாளிணை வாழியே *
சேலை வாழி திருநாபி வாழியே *
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே *
சுந்தரத் திருத் தோளிணை வாழியே *
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே *
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே *
பொய்யிலாத மணவாள மாமுனி *
புந்தி வாழி புகழ் வாழி வாழியே *

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ *
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ * - கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ * மணவாள மாமுனியே *
இன்னும் ஒரு நூற்றாண்டிரும்

---

**அப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய**

## ஆழ்வார்கள் வாழி திருநாமம்

**தனியன்**

அம்புவியில் ஆழ்வார்கள் ஆண்டாள் மதுரகவி
தம் பதி நாள் மாதம் தமிழ் தொகையை - நம் புவிக்கே
செப்புளாமின்றனமாய்ச் சேர்ந்த பெரு வாழி செய்த
அப்புளான் தாளே அரண்

**நூற்பயன்**

மண்ணுலகத்துள்ளோர்கள் மகிழ்ந்து வாழ
மணவாள மாமுனிகள் அருள் தன்னாலே
பண்ணருளிச் செயல் விளக்கம் வாழி நாமம்
பத்தியுடன் இவ்வுலகில் பயில்வார் கேட்போர்
விண்ணுலகத்தோர்களினும் கீர்த்தியுற்று
விளங்கியிட மெய்ஞ்ஞான வாழ்வு பெற்றே
கண்ணன் அடியார்களுடன் கலந்து நாளும்
காசினியில் சதிராக வாழ்வர் தாமே

வேதத்தின் உண்பொருளைத் தமிழால் நாளும்

விளக்கிடப் பன்னிருவர் வந்து தோன்றும்
மாதத்தை அவரவர்கள் உதித்த நாளை
வாழ் பதியைக் கலைத் தொகையை மனத்தில் வைத்துப்
போதத்தைத் தரும் தமிழால் வாழி நாமம்
பூதலத்தில் பேசுகின்றேன் இதனைக் கற்பார்
பாதத்தை என் முடி மேல் அணியாப் பூண்டு
பன்னாளும் கைகூப்பிப் பணிவேன் யானே

## நூல்

போத மிகும் பொய்கையார் பூதத்தார் வாழியே
புகழ் பேயார் மழிசையர் கோன் புத்தூரன் வாழியே
நாதமுனி தொழும் குருகை நாவீரன் வாழியே
நற்பாணன் கொல்லி நகர் நாதனார் வாழியே
ஆதரிக்கும் தொண்டரடிப்பொடி தாள்கள் வாழியே
அருட்கலியன் மதுரகவி ஆண்டாளும் வாழியே
ஏதமற்ற நாலாயிரப் பனுவல் வாழியே
இவர் உதித்த நாள் மாதம் எழிற்பதியும் வாழியே

## பொய்கையாழ்வார்

செய்ய துலா ஓணத்தில் செகத்துதித்தன் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே
வையந்தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனச மலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கை முனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே

## பூதத்தாழ்வார்

அன்பே தகளி நூறும் அருளினான் வாழியே
ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே
நன்புகழ் சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே
நல்ல திருக்கடல் மல்லை நாதனார் வாழியே
இன்புருகு சிந்தை திரியிட்ட பிரான் வாழியே
எழில் ஞானச் சுடர் விளக்கேற்றினான் வாழியே
பொன் புரையும் திருவரங்கர் புகழ் உரைப்போன் வாழியே
பூதத்தார் தாளினை இப்பூதலத்தில் வாழியே

## பேயாழ்வார்

திருக் கண்டேன் என நூறும் செப்பினான் வாழியே
சிறந்த ஐப்பசியில் சதயம் செனித்த வள்ளல் வாழியே
மருக்கமழும் மயிலை நகர் வாழ வந்தோன் வாழியே
மலர்க் கரிய நெய்தல் தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவே இடைகழியில் நின்ற செல்வன் வாழியே
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான் தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணை இப்பெரு நிலத்தில் வாழியே

## திருமழிசையாழ்வார்

அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறு உரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையில் மகத்திங்குதித்தான் வாழியே
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப் பொன்னிப் பெருக்கெதிர் செல் முதிர் கவியோன் வாழியே
நன்புவி நாலாயிரத்தெழுநூறு இருந்தான் வாழியே
நங்கள் பத்திசாரன் இரு நற்பதங்கள் வாழியே

## நம்மாழ்வார்

ஆன திருவிருத்தம் நூறும் அருளினான் வாழியே
ஆசிரியம் ஏழு பாட்டளித்த பிரான் வாழியே
ஈனமற அந்தாதி எண்பத்தேழீந்தான் வாழியே
இலகு திருவாய்மொழி ஆயிரத்தொரு நூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் மாமாடக் குருகை மன்னன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர் கோன் அவதாரம் செய்த வள்ளல் வாழியே
திருக் குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே

## குலசேகராழ்வார்

அஞ்சன மாமலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே
அணி அரங்கர் மணத் தூணை அடைந்துய்ந்தோன் வாழியே
வஞ்சி நகரம் தன்னில் வாழ வந்தோன் வாழியே
மாசி தனில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சலெனக் குடப் பாம்பில் அங்கை இட்டான் வாழியே
அனவரதம் இராம கதை அருளுமுவன் வாழியே
செஞ்சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே

சேரலர் கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

**பெரியாழ்வார்**

நல்ல திருப்பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே
நானூற்றறுபத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே
சொல்லரிய ஆனி தனில் சோதி வந்தான் வாழியே
தொடை சூடிக் கொடுத்தாள் தொழும் தமப்பன் வாழியே
செல்வ நம்பி தன்னைப் போல் சிறப்புற்றான் வாழியே
சென்று கிழி அறுத்து மால் தெய்வம் என்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளங்க வைத்தான் வாழியே
வேதியர் கோன் பட்டர் பிரான் மேதினியில் வாழியே

**தொண்டரடிப்பொடியாழ்வார்**

மண்டங்குடி அதனை வாழ்வித்தான் வாழியே
மார்கழியில் கேட்டை நாள் வந்துதித்தான் வாழியே
தெண்டிரை சூழ் அரங்கரையே தெய்வம் என்றான் வாழியே
திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளியெழுச்சிப் பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவி தனை பழித்த செல்வன் வாழியே
தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப் பதங்கள் வாழியே

**திருப்பாணாழ்வார்**

உம்பர் தொழும் மெய்ஞ்ஞானத்து உறையூரான் வாழியே
உரோகிணி நாள் கார்த்திகையில் உதித்த வள்ளல் வாழியே
வம்பவிழ் தார் முனி தோளில் வந்த பிரான் வாழியே
மலர்க் கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிள் அரங்கர் அகம் புகுந்தான் வாழியே
அமலனாதி பிரான் பத்தும் அருளினான் வாழியே
செம்பொன் அடி முடி அளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே

**திருமங்கையாழ்வார்**

கலந்த திருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே
நலம் திகழ் ஆயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற்றிருக்கை இருமடல் ஈந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே

வலம் திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர் கோன் வாழியே

### மதுரகவியாழ்வார்

சித்திரையில் சித்திரை நாள் சிறக்க வந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே
உத்தர கங்கா தீரத்து உயர் தவத்தோன் வாழியே
ஒளி கதிரோன் தெற்கு உதிக்க உகந்து வந்தோன் வாழியே
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசனே பரன் என்று பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப் பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே

### ஆண்டாள்

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே

---

## ஓராண்வழி ஆசார்யர்கள் வாழி திருநாமம்

### பெரிய பெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன் வாழியே
செய்யவிடைத் தாய் மகளார் சேவிப்போன் வாழியே
இரு விசும்பில் வீற்றிருக்கும் இமையவர் கோன் வாழியே
இடர் கடியப் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாய் அவதரித்தான் வாழியே
அந்தரியாமித்துவமும் ஆயினான் வாழியே
பெருகி வரும் பொன்னி நடுப்பின் துயின்றான் வாழியே
பெரிய பெருமாள் எங்கள் பிரான் அடிகள் வாழியே

### பெரிய பிராட்டியார்

பங்கயப் பூவில் பிறந்த பாவை நல்லாள் வாழியே

பங்குனியில் உத்தர நாள் பார் உதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலகம் என வந்த செல்வி வாழியே
மால் அரங்கர் மணி மார்பை மன்னுமவள் வாழியே
எங்கள் எழிற் சேனை மன்னர்க்கு இதம் உரைத்தாள் வாழியே
இருபத்தஞ்சு உட்பொருள் மால் இயம்புமவள் வாழியே
செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்தாள் வாழியே
சீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே

## சேனை முதலியார்

ஓங்கு துலாப் பூராடத்துதிச் செல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்ரவதி உறை மார்பன் வாழியே
ஈங்குலகில் சடகோபற்கு இதம் உரைத்தான் வாழியே
எழிற் பிரம்பின் செங்கோலை ஏந்துமவன் வாழியே
பாங்குடன் முப்பத்து மூவர் பணியுமவன் வாழியே
பங்கயத் தாள் திருவடியைப் பற்றினான் வாழியே
தேங்கு புகழ் அரங்கரையே சிந்தை செய்வோன் வாழியே
சேனையர் கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

## நம்மாழ்வார்

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதி குருவாய்ப் புவியில் அவதரித்தோன் வாழியே
அனவரதம் சேனையர் கோன் அடி தொழுவோன் வாழியே
நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே
நன்மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ் மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே

## ஸ்ரீமந் நாதமுனிகள்

ஆனி தனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க்கு உபதேசம் அருளி வைத்தான் வாழியே
பானு தெற்கில் கண்டவன் சொல் பல உரைத்தான் வாழியே
பராங்குசனார் சொல் பிரபந்தம் பரிந்து கற்றான் வாழியே
கானமுறத் தாளத்தில் கண்டிசைத்தான் வாழியே
கருணையினால் உபதேசக் கதி அளித்தான் வாழியே
நானிலத்தில் குரு வரையை நாட்டினான் வாழியே
நலம் திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே

**உய்யக்கொண்டார்**

வால வெய்யோன் தனை வென்ற வடிவழகன் வாழியே
மால் மணக்கால் நம்பி தொழும் மலப்பதத்தோன் வாழியே
சீல மிகு நாதமுனி சீர் உரைப்போன் வாழியே
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே
நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே
மால் அரங்க மணவாளர் வளம் உரைப்போன் வாழியே
வையம் உய்யக் கொண்டவர் தாள் வையகத்தில் வாழியே

**மணக்கால் நம்பி**

தேசம் உய்யக் கொண்டவர் தாள் சென்னி வைப்போன் வாழியே
தென்னரங்கர் சீர் அருளைச் சேர்ந்திருப்போன் வாழியே
தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன் வாழியே
தமிழ் நாதமுனி உகப்பைத் தாபித்தான் வாழியே
நேசமுடன் ஆரியனை நியமித்தான் வாழியே
நீள் நிலத்தில் பதின்மர் கலை நிறுத்தினான் வாழியே
மாசி மகம் தனில் விளங்க வந்துதித்தான் வாழியே
மால் மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே

**ஸ்ரீ ஆளவந்தார்**

மச்சணியும் மதிள் அரங்கம் வாழ்வித்தான் வாழியே
மறை நான்கும் ஓர் உருவில் மகிழ்ந்து கற்றான் வாழியே
பச்சை இட்ட ராமர் பதம் பகருமவன் வாழியே
பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன் வாழியே
கச்சி நகர் மாயன் இரு கழல் பணிந்தோன் வழியே
கடக உத்தராடத்துக் காலுதித்தோன் வாழியே
அச்சமற மன மகிழ்ச்சி அணைந்திட்டான் வாழியே
ஆளவந்தார் தாளிணைகள் அனவரதம் வாழியே

**பெரிய நம்பிகள்**

அம்புவியில் பதின்மர் கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
ஆளவந்தார் தாளிணையை அடைந்துய்ந்தோன் வாழியே
உம்பர் தொழும் அரங்கேசர்க்கு உகப்புடையோன் வாழியே
ஓங்கு தனுக் கேட்டை தன்னில் உதித்த பிரான் வாழியே
வம்பவிழ்தார் வரதர் உரை வாழி செய்தான் வாழியே
மாறனேர் நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே
எம்பெருமானார் முனிவர்க்கு இதம் உரைத்தான் வாழியே
எழில் பெரிய நம்பி சரண் இனிதூழி வாழியே

## திருக்கச்சி நம்பிகள்

மருவாரும் திருமல்லி வாழ வந்தோன் வாழியே
மாசி மிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே
அருளாளருடன் மொழி சொல் அதிசயத்தோன் வாழியே
ஆறு மொழி பூதூரர்க்கு அளித்த பிரான் வாழியே
திரு ஆலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
தேவராச அட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே

## எம்பெருமானார்

அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே
அருட்கச்சி நம்பி உரை ஆறு பெற்றோன் வாழியே
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே
பதின்மர் கலை உட்பொருளைப் பரிந்து கற்றான் வாழியே
சுத்த மகிழ் மாறன் அடி தொழுதுய்ந்தோன் வாழியே
தொல் பெரிய நம்பி சரண் தோன்றினான் வாழியே
சித்திரையில் ஆதிரை நாள் சிறக்க வந்தோன் வாழியே
சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே

எண்டிசையெண் இளையாழ்வார் எதிராசன் வாழியே
எழுபத்து நால்வர்க்கும் எண்ணான்குரைத்தான் வாழியே
பண்டை மறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே
பரகாலன் அடியிணையைப் பரமுவன் வாழியே
தண்டமிழ் நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே
தாரணியும் விண்ணுலகும் தான் உடையோன் வாழியே
தெண்டிரை சூழ் பூதூர் எம்பெருமானார் வாழியே
சித்திரையில் செய்ய திருவாதிரையோன் வாழியே

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்ய வடிவு எப்பொழுதும் வாழி
இலங்கிய முன்னூல் வாழி இணைத் தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச் சோதி வாழி
தூமுறுவல் வாழி துணை மலர்க் கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனிதிருப்போடு எழில் ஞான முத்திரை வாழியே

அறு சமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிருட்டிகளை அறத்துறந்தான் வாழியே
செறு கலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே

தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே
மறை அதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தோன் வாழியே
மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே

சங்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடு நாள்
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத் தளர் நாள்
மேதினி நம் சுமை ஆறும் எனத் துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே

## கூரத்தாழ்வான்

சீராரும் திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே
தென்னரங்கர் சீர் அருளைச் சேருமவன் வாழியே
பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே
நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே
நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே
ஏராரும் தையில் அத்தத்திங்கு வந்தான் வாழியே
எழில் கூரத்தாழ்வான் தன் இணை அடிகள் வாழியே

## முதலியாண்டான்

அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே
அருட்பச்சை வரணத்தில் அவதரித்தான் வாழியே
சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
சீபாடியம் ஈடு முதல் சீர் பெருவோன் வாழியே
உத்தமமாம் வாதூலம் உயர வந்தோன் வாழியே
ஊர் திருந்தச் சீர்பாதம் ஊன்றினான் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடி பெறுவோன் வாழியே
முதலியாண்டான் பொற்பாதங்கள் ஊழிதொறும் வாழியே

## திருவரங்கத்தமுதனார்

எந்தாதை கூரேசர் இணை அடியோன் வாழியே
எழில் மூங்கில்குடி விளங்க இங்கு வந்தோன் வாழியே
நந்தாமல் எதிராசர் நலம் புகழ்வோன் வாழியே
நம் மதுரகவி நிலையை நண்ணினான் வாழியே

பைந்தாம அரங்கர் பதம் பற்றினான் வாழியே
பங்குனியில் அத்த நாள் பார் உதித்தோன் வாழியே
அந்தாதி நூற்றெட்டும் அருளினான் வாழியே
அணி அரங்கத்தமுதனார் அடி இணைகள் வாழியே

**எம்பார்**

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே
பொய்கை முதல் பதின்மர் கலைப் பொருள் உரைப்போன் வாழியே
மாவளரும் பூதூரான் மலர்ப் பதத்தோன் வாழியே
மகரத்தில் புனர்புசம் வந்துதித்தோன் வாழியே
தேவும் எப்பொருளு படைக்கத் திருந்தினான் வாழியே
திருமலை நம்பிக்கு அடிமை செய்யுமவன் வாழியே
பாவையர்கள் கலவி இருள் பகல் என்றான் வாழியே
பட்டர் தொழும் எம்பார் பொற்பதம் இரண்டும் வாழியே

**பட்டர்**

தென்னரங்கர் மைந்தன் எனச் சிறக்க வந்தோன் வாழியே
திருநெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே
அன்னவயல் பூதூரான் அடி பணிந்தோன் வாழியே
அனவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே
மன்னு திருக்கூரனார் வளம் உரைப்போன் வாழியே
வைகாசி அனுடத்தில் வந்துதித்தோன் வாழியே
பன்னு கலை நால்வேதப் பயன் தெரிவோன் வாழியே
பராசரனாம் சீர் பட்டர் பார் உலகில் வாழியே

**நஞ்சீயர்**

தெண்டிரை சூழ் திருவரங்கம் செழிக்க வந்தோன் வாழியே
சீமாதவன் என்னும் செல்வனார் வாழியே
பண்டை மறைத் தமிழ்ப் பொருளைப் பகர வந்தோன் வாழியே
பங்குனியில் உத்தர நாள் பார் உதித்தான் வாழியே
ஒண்டொடியாள் கலவி தன்னை ஒழித்திட்டான் வாழியே
ஒன்பதினாயிரப் பொருளை ஓதுமவன் வாழியே
எண்டிசையும் சீர் பட்டர் இணை அடியோன் வாழியே
எழில் பெருகும் நஞ்சீயர் இனிதூழி வாழியே

**நம்பிள்ளை**

தேமருவும் செங்கமலத் திருத்தாள்கள் வாழியே
திருவரையில் பட்டாடை சேர் மருங்கும் வாழியே
தாமம் அணி வட மார்வும் புரி நூலும் வாழியே

தாமரைக் கை இணை அழகும் தடம் புயமும் வாழியே
பாமருவும் தமிழ் வேதம் பயில் பவளம் வாழியே
பாடியத்தின் பொருள் தன்னைப் பகர் நாவும் வாழியே
நாம நுதல் மதி முகமும் திருமுடியும் வாழியே
நம்பிள்ளை வடிவழகும் நாடோறும் வாழியே

காதலுடன் நஞ்சீயர் கழல் தொழுவோன் வாழியே
கார்த்திகைக் கார்த்திகை உதித்த கலிகன்றி வாழியே
போதமுடன் ஆழ்வார் சொல் பொருள் உரைப்போன் வாழியே
பூதூரான் பாடியத்தைப் புகழுமவன் வாழியே
மாதகவால் எவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே
மதிள் அரங்கர் ஓலக்கம் வளர்த்திட்டான் வாழியே
நாதமுனி ஆளவந்தார் நலம் புகழ்வோன் வாழியே
நம்பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே

## வடக்குத் திருவீதிப் பிள்ளை

ஆனி தனில் சோதி நன்னாள் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப் பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தான் உகந்த நம்பிள்ளை தாள் தொழுவோன் வாழியே
சடகோபன் தமிழ்க்கு ஈடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்ல உலகாரியனை நமக்கு அளித்தான் வாழியே
ஈனமற எமை ஆளும் இறைவனார் வாழியே
எங்கள் வடவீதிப் பிள்ளை இணை அடிகள் வாழியே

## பிள்ளை லோகாசர்யர்

அத்திகிரி அருளாளர் அனுமதியோன் வாழியே
ஐப்பசியில் திருவோணத்தவதரித்தான் வாழியே
முத்தி நெறி மறைத் தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே
நித்தியம் நம்பிள்ளை பதம் நெஞ்சில் வைப்போன் வாழியே
நீள் வசன பூடணத்தில் நியமித்தான் வாழியே
உத்தமமாம் முடும்பை நகர் உதித்த வள்ளல் வாழியே
உலகாரியன் பதங்கள் ஊழிதொறும் வாழியே

## கூர குலோத்தம தாசர்

சந்ததமும் ஆழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே
தாரணியில் சிறுநல்லூர் தான் உடையோன் வாழியே
எந்தை உலகாரியனை இறைஞ்சுமவன் வாழியே
இலகு துலா ஆதிரையில் இங்குதித்தோன் வாழியே

இந்த உலகோர்க்கு இதம் உரைத்தோன் வாழியே
எழில் வசன பூடணத்துக்கு இனிமை செய்தான் வாழியே
குந்தி நகர் சிந்தை கொண்ட செல்வனார் வாழியே
கூர குலோத்தம் தாசர் குரை கழல்கள் வாழியே

**திருவாய்மொழிப் பிள்ளை**

வையகமெண் சடகோபன் மறை வளர்த்தோன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
ஐயன் அருண்மாரி கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
அழகாரும் எதிராசர் அடி பணிவோன் வாழியே
துய்ய உலகாரியன் தன் துணைப் பதத்தோன் வாழியே
தொல் குருகாபுரி அதனைத் துலக்கினான் வாழியே
தெய்வ நகர் குந்தி தன்னில் சிறக்க வந்தோன் வாழியே
திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகள் வாழியே

**மணவாள மாமுனிகள்**

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப் பிள்ளை இணை அடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும் வாழியே
எப்புவியும் ஶ்ரீசைலம் ஏத்த வந்தோன் வாழியே
ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே
முப்புரி நூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே

**திருநாள் பாட்டு**

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள்
சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்
மந்த மதிப் புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடு நாள்
மாசறு ஞானியர் சேர் எதிராசர் தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்த மலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள்
காரமர் மேனி அரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில் சீர் மணவாள முனிப் பரன் அவதாரம் செய்திடு நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலமதெனு நாளே

---

## இயல் சாத்து
## (மணவாள மாமுனிகளால் நியமிக்கப் பெற்றது)

## பிள்ளை உறங்காவில்லி தாசர் அருளிச் செய்தது

நன்றும் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் *
ஒன்றும் குறை இல்லை ஓதினோம் * - குன்றம்
எடுத்தான் அடி சேர் இராமானுசன் தாள்*
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி

## வகுளாபரண பட்டர் அருளிச் செய்தது

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை *
வாழி திருமல்லி வள நாடு * - வாழி
சுழி பொறித்த நீர்ப் பொன்னித் தென்னரங்கன் தன்னை *
வழி பறித்த வாளன் வலி

## ஸ்ரீ பராங்குச தாசர் அருளிச் செய்தது

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி *
திருநாட்டுத் தென்குருகூர் வாழி * - திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி * வாழி சடகோபன்
இட்டத் தமிழ்ப் பாவிசை

## பரகால தாசர் அருளிச் செய்தது

மங்கை நகர் வாழி வண் குறையலூர் வாழி *
செங்கை அருண்மாரி சீர் வாழி * - பொங்கு புனல்
மண்ணித்துறை வாழி * வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப் பாவிசை

## பிள்ளை இராமானுச தாசர் அருளிச் செய்தது

வாழியரோ தென் குருகை வாழியரோ தென் புதுவை *
வாழியரோ தென்குறையல் மாநகரம் * - வாழியரோ
தக்கோர் பரவும் தடம் சூழ் பெரும்பூதூர் *
முக்கோல் பிடித்த முனி

## திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்தது

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் * வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின் **

பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடி அல்லா
வழியைக் கடத்தல் * எனக்கினியாதும் வருத்தமன்றே

**பிள்ளை அழகிய மணவாள தாசர் அருளிச் செய்தது**

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும் *
வஞ்சக் குறும்பின் வகை அறுத்தேன் * மாய வாதியர் தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமாதவன் அடிக்கன்பு செய்யும் *
தஞ்சத்தொருவன் சரணாம் புயம் என் தலைக்கணிந்தே

**பின்பழகராம் பெருமாள் சீயர் அருளிச் செய்தது**

ஊழி தொறும் ஊழி தொறும் உலகம் உய்ய உம்பர்களும் கேட்டுய்ய * அன்பினாலே
வாழி எனும் பூதம் பேய் பொய்கை மாறன் மழிசையர் கோன் பட்டர் பிரான் மங்கை வேந்தன் *
கோழியர் கோன் தொண்டர் துகள் பாணன் கோதை குல முனிவன் கூறிய நூலோதி * வீதி
வாழி என வரும் திரளை வாழ்த்துவார் தம் மலர் அடி என் சென்னிக்கு மலர்ந்த பூவே

---

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**